# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2029 கார்த்திகை 14 திங்கட்கிழமை (30-11-1998) UTHAYAN-ALively National Tamil Daily கதிர்:3


# களுத்துறை தமிழ் கைதிகள் உண்ணாவிரதம் விஸ்தரிப்பு

## மேலும் 32 கைதிகள் நேற்று இணைவு

கொழும்பு, நவம்பர் 30

ஒன்றரை வருடங்களாகத் தடுத்து வைக்கப் பட்டுள்ள தம்மை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டும். அன்றேல் விடுதலை செய்யவேண் டும் என்று கோரி களுத்துறைச் சிறைச்சாலை யில் ஆரம்பிக்கப்பட்டுள்ள உண்ணா விரதப் போராட்டம் நேற்று] விஸ்தரிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் ஆறு தமிழ்க் கைதிகளின் ஆதரவு டன் ஆரம்பமான உண்ணா விரதத்தில் மேலும் 32 பேர் நேற்று இணைந்து கொண் டனர்.

அடுத்த கட்டங்களில் மேலும் தமிழ்க்கைதிகள் பலர் உண்ணாவிரதத்தில் குதிக்க உள்ளனர்

இந்தச் சிறைச்சாலையில் 759 தமிழ்க் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அதே நேரம்- உண்ணா விர திகளுடன் பேச சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ். பாஸ்கர சிங்கம் அங்கு சென்றுள்ளார் என்று நேற்றிரவு தெரிவிக் கப்பட்டது.

(இ-3-9-21)

## அம்பாறையில் சம்பவம்

அம்பாறை மாவட்டத்தில் அட்டாளைச் சேனையில் மீனோடைக் கட்டு என்னும் இடத்தில் நேற்று மாலை விசேட அதிரடிப்படையின ருக்கும், விடுதலைப் புலி களுக்கும் இடையில் மோதல் ஒன்று இடம்பெற்றது.

முஸ்லிம் காங்கிரஸ் பிர கடனம் செய்த முஸ்லிம் மக் களின் அரசியல் உரிமை தின மான நேற்று அது தொடர் பான கூட்டம் அட்டாளைச் சேனையில் நடைபெறவிருந்த சமயமே இந்த மோதல் இடம் பெற்றது.

இதனால் கூட்டம் தாமத மாகத் தொடங்கியது. முஸ் லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப் தாமதமாகவே கூட்டத்துக்கு வருகை தந் தார். (இ-3-14)

## அ'புரத்தில் 278 படையினர் கைது

கொழும்பு, நவ. 30

கடமைக்குத் திரும்பத் தவ றிய இராணுவ லெப்டினன்ட் ஒருவர் உட்பட 278 படை வீரர்கள் அனுராதபுரத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 2 பெண் படை வீரர்களும் அடங்குவர்.

இராணுவத்திலிருந்து தப்பி யோடியவர்களைக் கைது செய்வதற்கு அனுராதபுரம் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட் சகர் மகிந்த பெத்தவலவின் பணிப்புரையின் பேரில் நட வடிக்கை எடுக்கப்படுகிறது.



அப்ப, நிபந்தனை இல்லா மல் எதுவுமே நடக்காது போல......!

## படகு மூலம் 16 தமிழ் அகதிகள் தனுஷ்கோடிக்கு

தலைமன்னாரில் இருந்து 16 தமிழ் அகதிகளை ஏற்றிக் கொண்டு படகு ஒன்று தனுஷ் கோடி சென்றுள்ளது.

தலைமன்னாரில் இருந்து எட்டு ஆண்கள், ஐந்து பெண் கள், மூன்று சிறுவர்கள் ஆகி யோரை ஏற்றிக் கொண்டு இந்தப் படகு நேற்று முன் தினம் சனிக்கிழமை தனுஷ் கோடியை சென்றடைந்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூர்ப் பகுதியில் மோதல்

திருகோணமலை, நவ. 30

திருகோணமலை மாவட் டம் மூதூரில் பச்சநூர் என் னும் இடத்தில் கால்நடை யாக ரோந்துப்பணியில் ஈடு பட்டிருந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் நேற்றுக் காலை 7.30 மணியளவில் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலில் ஐந்து படையினர் உயிரிழந்ததாக வும், மூன்று படையினர் படு காயமடைந்ததாகவும் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இத் தாக்குதலை மேலதிக துருப்புக்கள் அங்கு சென்று முறியடித்ததாக படைவட் டாரங்கள் மேலும் தெரிவித் தன.

இந்தச் சண்டையில் பல ஆயுதங்களுடன் 4 படையின ரின் சடலங்களை தாம் கைப் பற்றியுள்ளதாகவும்—

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலமாக படையின ரிடம் சடலங்களை ஒப் படைக்கவிருப்பதாகவும்— விடுதலைப் புலிகள் தெரிவித் துள்ளனர்.

(இ-3)

## தயிர் ரின் வெடித்து ஐவர் காயமடைந்தனர்

### மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு, நவ. 30

மட்டக்களப்பு ஒட்டமாவடிப் பகுதியில் நேற்றிரவு 8.45 மணியளவில் தயிர் நிரப்பப்பட்ட ரின் ஒன்று வெடித்துச் சிதறியதில் ஐவர் காயம் அடைந்தனர்.

அந்தப் பகுதியில் உள்ள தையல் கடை ஒன்றில் பணி புரிபவர்கள் கடையைப் பூட்டி விட்டு, கடை வாசலில் நின்ற சமயம் இந்த ரின் அவர்களுக்கு அருகில் வீழ்ந்த தாகவும் — உடன் அது வெடித்ததாகவும் — தெரிவிக்கப் பட்டது.

காயம் அடைந்தவர்கள் மட்டக்களப்பு ஆஸ்பத்திரி யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-3-21)

## அகதிகள் மற்றும் அரச ஊழியருடன் 'லங்காமுடித்த' நாளை புறப்பட்டுவரும்

திருகோணமலை, நவ. 30

திருகோணமலையிலிருந்து இன்று காங்கேசன்துறைநோக் கிப் புறப்படவிருந்த 'லங்கா முடித்த' கப்பல் பயணிகளு டன் நாளையே புறப்படுமென திருகோணமலைப் பட்டண மும், சூழலும் பிரதேச செய லகம் தெரிவித்துள்ளது.

நாளை புறப்படும் கப்பலில் 250 அகதிகளும், 250 அரச ஊழியர்கள் மற்றும்பல்கலைக் கழக மாணவர்கள் அழைத்து வரப்படுவர்.

திருகோணமலையிலும் யாழ்ப்பாணத்திலும் தங்கி யுள்ள பயணிகளை ஏற்றி இறக்குவதற்காக இந்தக் கப் பல் எதிர்வரும் 7 ஆம் திகதி யும், 10 ஆம் திகதியும் இரு சேவைகளை நடத்தவிருப்ப தாக திருமலைப் பிரதேச செயலகம் மேலும் தெரிவித் தது. (இ-3)

## வடமராட்சி கிழக்கில் தேடுதல் நடவடிக்கை

செம்பியன்பற்று நவ. 30

வடமராட்சி கிழக்கில் மாமுனை, மானிய வளை குடாரப்பு பகுதிகளில் நேற் றுக் காலை முதல் மாலை வரை தேடுதல் நடத்தப்பட் டது.

இந்தத் தேடுதலின் போது நாகர்கோயில் ஊடாக செம் பியன்பற்றுக்கான போக்கு வரத்துக்கள் தடைப்பட்டன.

அதே சமயம் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் இரண்டு இளைஞர்களின் சடலங்கள் நேற்றுக்காலை குடாரப்புச் சந்தியில் கிடக் கக் காணப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதிக்கு வந்த படை யினர் அச்சடலங்களை நாகர் கோயில் படைமுகாமுக்குக் கொண்டு சென்றனர் என்றும் கூறப்பட்டது.

அதேசமயம் நேற்று முன் தினம் மாமுனைப்பகுதியில் மோதல் சம்பவங்கள் இடம் பெற்றதாகவும் கூறப்பட் டது. (இ-36)

## வவுனியாவில் இராணுவ கட்டுப்பாட்டு பகுதிக்குள் புலிகள் ஊடுருவல்!

வவுனியா, நவ. 30

வவுனியா மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் விடுதலைப் புலி கள் ஊடுருவியுள்ளனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

மகாரம்பைக்குளம் பகுதி யில் நேற்று முன்தினம் இரவு 25 இற்கும் மேற்பட்டவர்கள் ஆயுதங்கள் சகிதம் வந்து அப் பகுதியிலுள்ள கடைகளைத் தட்டி அங்கிருந்து உணவுப் பொருள்களை வாங்கிச் சென் றுள்ளனர் என்றும் —

வவுனியா நகரில் எச்சரிக் கைத் துண்டுப்பிரசுரங்கள் காணப்படுவதாகவும் — தெரி விக்கப்பட்டது.

வவுனியா நகரில் இடம் பெறும் சம்பவங்களை நோக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு ஆளுநர் ஜனாதிபதியை சந்திப்பார்

திருகோணமலை, நவ. 30

வடக்கு - கிழக்கு மாகாண சபை நிர்வாகம் தொடர்பாக புதிய ஆளுநர் மேஜர் ஜென ரல் அசோகா ஜெயவர்த் தனா இவ்வாரம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் பேச்சு நடத்தவிருக்கிறார்.

கடந்த வாரம் திருகோண மலையில் தங்கியிருந்த ஆளு நர் அமைச்சுச் செயலாளர் கள் மற்றும் அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தினர்.

மாகாண சபை நிர்வாகம் தொடர்பான விவரங்களைப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்தொழில் செய்ய நிபந்தனையுடனேயே மீனவர்களுக்கு அனுமதி

குருநகர், நவ. 30

குடாக்கடலில் மீன்பிடிக்க கொழும்புத்துறை, குருநகர், பாஷையூர் மீனவர்கள் நிபந் தனையுடனேயே அனுமதிக் கப்படுவர்.

★ மீனவர்கள் மீன்பிடிக் கும் கடல் எல்லையை குறிக் கும் கொடிக்கம்பம் கடலில் போடப்படும். அந்த எல் லைக்கு அப்பால் மீனவர்கள் செல்ல முடியாது.

★ தொழில் செய்யும்போது குடாக் கடலில் உள்ள கல் லடிக் கரையில் மீனவர் இறங் கக் கூடாது. எவராவது அக் கரையில் இறங்கினால் மீன் பிடித் தொழில் இடைநிறுத் தப்படும்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது சங்கத் தலைவரும் மூத்த பத்திரிகையாளரும்
இளைப்பாறிய அதிபருமான

**திரு. செ. கதிர்காமத்தம்பி**
B.A, S.L.E.S.

அவர்கள்

அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் பெற்றுள்ளதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வட இலங்கை
பத்திரிகையாளர் சங்கம்,
யாழ்ப்பாணம்.

(சி/5654)

# கண்ணீர் அஞ்சலி

யாழ்/சுதுமலை வடக்கு த. க. பாடசாலையின்
ஓய்வு பெற்ற அதிபர்
வே. தம்பிராசா அவர்களின் துணைவியாரான
திருமதி

**இராசமணி தம்பிராசா**

அவர்கள் இறைபதம் எய்தியமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யாழ்/சுதுமலை வடக்கு த. க. பாடசாலை.

(60999)

# கண்ணீர் அஞ்சலி

**சின்னப்பு இராசேந்திரம்**

தோற்றம்: 1933- 06 - 06
மறைவு: 1998- 11- 28

வடபகுதி ஐக்கிய மேற்பார்வை சபை, தேசிய கூட்டுறவுச் சபை, யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையில் கடமையாற்றி இளைப்பாறிய சின்னப்பு இராசேந்திரம் அவர்கள்இறைவனடிசேர்ந்ததையிட்டு அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன், துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்
யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சபை.
(சி/5652)

# ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.
சிவாஜி - ராதா நடித்த
முதல் மரியாதை
தினசரி
10-30, 2-00, 5-00
(சி/5608)

# நாகம்ஸ்

சினிமா
சுன்னாகம்.
30 அடி அகலத் திரையில்
பிரபு, தேவயானி,
கவுண்டமணி, செந்தில்
நடித்த
என்உயிர் நீதானே
(நேரடி CD யில்)
தினசரி 10-30, 2-30
(60994)

# லிபேட்டி

தியேட்டர்
அச்சுவேலி.
ஒளி, ஒலி திறமையாக
அமைத்து மீண்டும்
மேற்படி தியேட்டர்
( 28 - 11 - 98 )
சனிக்கிழமை முதல்
ஆரம்பம்.
பிரபு, தேவயானி,
கவுண்டமணி, செந்தில்
நடித்த
என்உயிர் நீதானே
தினசரி: 10-30, 2-30
( பழைய நேரம் )
தொலைபேசி:
**070 - 212223**
(60920)

# தங்க நாணயம்

இதோ!
தங்க நாணயம்
உங்களுக்கே!!
விவரங்கள்
நாளைய பத்திரிகையில்
S.K. பிரபாகரன்
ஆனைக்கோட்டை.
(60995)

# நூல் வெளியீட்டு விழா

29-11-1998 ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு எனது நூல் வெளியீட்டு விழா ஞானியார் கோயில் மண்டபத்தில் நடைபெற்றது. அவ்விழாவை யொட்டிய பிரசுரத்தில் திரு. ச. மோகனதாஸ் அவர்களுடைய பெயர் அவருடைய ஒப்புதலின்றிப் பிரசுரிக்கப்பட்டமைக்கும் அவருடைய தொழிலை தவறுதலாக ஸ்தபதி என்று பிரசுரித்தமைக்கும் எனது ஆழ்ந்த வேதனையைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

வி. செல்வரத்தினம் J P.
நூலாசிரியர்.

(60997)

# வாழ்த்துகின்றோம்

யா/தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரியில்
14 வருடங்கள் அதிபராக
தன்னலமற்ற சேவையாற்றி
29-11-98 இல் ஓய்வு பெற்ற கல்லூரி அதிபர்

**உயர்திரு க. நாகராஜா**
M. A. (cey) Dip-in-Ed (cey)

அவர்களின் சேவையை வாழ்த்துகின்றோம்.

" சிரித்த முகத்துடனே
சீரியநற் சேவையாற்றி
சீர்மையுடன் ஓய்வு பெறும்
செம்மனத்தான் சிறப்பு ஓங்க! "

புதிய அதிபராகப் பொறுப்பேற்கும்

**திரு. பொ. சுந்தரலிங்கம்**
B. Sc, (cey), Dip-in-Ed (cey)

அவர்களை மனதார வாழ்த்தி வரவேற்கின்றோம்.

" சிந்தனை நயப்புடனே
சேவையாற்றி உயர்வுபெற்ற
வந்தனைக்குரிய வாண்மை
வளர்க! நீடு வாழ்க!! "

மகாஜனவின்
மாலைநேர விளையாட்டு வீரர்கள்

(61000)

# கண்ணீர் அஞ்சலி

அமரர்

**சின்னப்பு இராசேந்திரம்**

தோற்றம்: 06 – 06 – 1933
மறைவு: 28 – 11 – 1998

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின்
முன்னாள் பணியாளரும்
யாழ். மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி
பழைய மாணவர் சங்கத்தின் நிர்வாக சபை
உறுப்பினருமாகிய

சின்னப்பு இராசேந்திரம்

அவர்கள் இயற்கையெய்தியுள்ளமையையிட்டு எங்கள் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யாழ்.மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி.
14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(சி/5653)

# ★ மங்களகரமான திறப்பு விழா ★



அன்புடையீர்!

நிகழும் வெகுதானிய வருடம் கார்த்திகை மாதம்
14 ஆம் நாள் ( 30-11-98 ) திங்கட்கிழமை மாலை
5-00 — 6-00 மணிவரையான சுபநேரத்தில்

**மெலோடியஸ் மியூசிக்**

**MOLODIUS MUSIC**

என்னும் ஸ்தாபனம் திறந்து வைக்கப்படுகின்றது.

யாழ். நகரில்
முதன் முறையாகச் சிறந்த முறையில்
கோம்பக்ற் டிஸ்கிலிருந்து டிஜிற்றல் ஓடியோ சீடி
பதிவும், அத்துடன் ஓடியோ கசட் ஒலிப் பதிவும்
செய்து கொடுக்கப்படும்.



வாடிக்கையாளர்களையும் அன்பர்களையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

**303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
( கன்னாதிட்டிச் சந்திக்கு அண்மையில் )

(60998)

# மரண அறிவித்தல்

**ஆறுமுகம் பாலச்சந்திரன்**

(காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை
மெடிக்கல் அஸிஸ்டன்)

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பாலச்சந்திரன் காலமாகிவிட்டார்.

அன்னார் விமலலோஜினியின் அன்புக் கணவரும், சுரேஷ்குமாரின் அன்புத் தந்தையும், ராமச்சந்திரன், கமலாதேவி, பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(30-11-98) முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் சித்தன்கேணி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வழுக்கியாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. லோகச்சந்திரன்
(மருமகன்)
சித்தன் கேணி.
(சி/5655)

# தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் அதிபர் திரு. க. நாகராசா அவர்களின் சேவை நலன் பாராட்டுச் சிறப்பிதழ்

## வாழ்த்துரை

வகாமம் வடக்குப்பிரதேசத்தில் இணையற்ற கல்வி நிலையமாக விளங்குவது தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆகும். ஸ்தாபகரின் பெருமையினாலும், மகாஜனச் சிற்பியின் ஆளுமையினாலும் அன்றும் இன்றும் பெருமைபெற்று விளங்குவது இக்கல்லூரி. இதற்குக் காரணர்களாக அமைந்த அதிபர்கள் வரிசையில் திரு. க. நாகராசா அவர்கள் கல்வி உலகில் ஒரு கலங்கரை விளக்காகும்.

கல்வித்துறையிலும், விளையாட்டுத்துறையிலும், சமயத்துறையிலும் சீரிய பண்பாட்டுத் துறையிலும் மாணவர்களை முன்னிடம் வகிக்க வைத்த பெருந்தகை இவர். இதனால் பெற்றோர்கள், நலன்விரும்பிகள், கல்வி அதிகாரிகள் அனைவரதும் நன்மதிப்பைப் பெற்றவர். நல்ல கருமங்கள் ஆற்றுவதற்கு துணிவு கொண்டு முன்வைத்த காலை எந்நேரத்திலும் பின் எடுக்க மாட்டார். சொற்சுருக்கமும், செயற்பெருக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உழைப்பால் உயர்ந்த அதிபர்

யா/மகாஜனக் கல்லூரியின் மாணவனாய், பின் ஆசிரியராய், உபஅதிபராய், அதிபராய் 15 வருடங்கள் இடர் நிறைந்த காலத்தை வென்று நற்பணியாற்றி ஒய்வு பெறுகிறார் அதிபர் திரு. க. நாகராசா அவர்கள். கல்லூரி ஸ்தாபகரின் கல்விச் சிந்தனை வழி நின்று, கல்விப்பணி புரிந்து 1990 களின் பின் எத்தனையோ இடப்பெயர்வுகளைச் சந்தித்தும் கலங்காமல் கல்லூரியின் கட்டுக்கோப்பு குலையாமல் கல்லூரி சார்ந்த சமூகம் கல்வியின் பயனை அடைய வழிசமைத்துள்ளார் இவர்.

தமது அணுகு முறைகளினால் கல்லூரியினது கல்விச் செல்வத்தையும் பொருட்செல்வத்தையும் பாரிய அளவில் வளம்படுத்தினார். அதனால் இடம்பெயர்ந்த நிலையிலும் யாரையும் எதிர்பாராமல் கல்லூரியின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்தமையால் மாண

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தற்காவலனாக வாய்த்தவர்

பாவலர் துரையப்பாவின் நெஞ்சக் கனவில் ஒளிர்ந்த கல்விச்சாலை மகாஜனக்கல்லூரி தனயன் ஜெயரத்தினத்தின் அரவணைப்பில் ஜெயம் கண்டது இது நாடறிந்த உண்மை. அந்தச் சீர் எமது தாயின் சேவைச் செழிப்பை நிதான புத்தியுடன் எடுத்துச் செல்ல 02–12–85 இல் வந்தவர் தான் ஒய்வுபெறும் அதிபர் திரு. க. நாகராசா அவர்கள்.

''நெல்லும் உயிரன்றே நீருமுயரன்றே; மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்'' என்கிறது. சங்கச்செய்யுள், அதன் உட்பொருளுக்கமைய அடைந்த சீரைச் சிதைவுறா வண்ணம் காப்பாற்ற தற்காவலனாக வாய்த்தவர் முதுகலைமாணியான கற்றுணர்ந்த க. நாகராசா அவர்கள். இடம்பெயர்வு என்னும் இடர் வந்து இன்னல் உறுமுன் இங்கிதமாக கல்விக் கோயிலைக் கால்கோள் செய்த பிதாமகரின் சிந்தனைக்கொப்ப அதனைக் காத்த பெருமை அதிபரைச் சாரும்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சாதனை படைத்த அதிபர்

மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவராகிய திரு. க. நாகராசா அவர்கள் 1984 ஆம் ஆண்டு முற்பகுதியில் கல்லூரியில் ஒரு சாதாரண ஆசிரியராக கடமையேற்றதும் ஆசிரியர் வளத்துக்கு புதுப்பொலிவு ஏற்பட்டதுடன் அவரிடம் இருந்த கல்லூரிப் பற்றையும் ஆசிரியத்துறையில் அவர் எடுத்த முயற்சிகளையும், திறமைகளையும் வியந்த கல்லூரிச்சமூகத்தினர் அவரை 1985 ஆம் ஆண்டு மார்கழி 3 ஆம் திகதி தொடக்கம் அதிபராக இருத்தி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அரும் பணியாளன்

தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியின் அதிபராகச் சேவையாற்றிய திரு. க. நாகராசா அவர்கள் சிறந்த சேவை ஆற்றியுள்ளார். இடம் பெயர்வினால் ஏற்பட்ட இன்னல்களுக்கெல்லாம் முகங் கொடுத்து, கல்லூரியின் வளர்ச்சிக்காக அரும்பணியாற்றிய அன்னாரைப் பாராட்டுகின்றோம், வாழ்த்துகின்றோம்.

**சி. சிவமகாராசா**
தலைவர்,
தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்,



சேவை விவரம்

1968 கார்த்திகை மாதம் —
தர்மபுரம் மகா வித்தியாலயம், கிளிநொச்சி.
1969 ஆடி மாதம் —
யா / கனகரத்தினம் ம. ம. வித்தியாலயம்.
1977 தை மாதம் —
கொழும்பு பல்கலைக்கழகம் (பட்டப்படிப்பு)
1978 தை மாதம் —
மன்னார்/நானாட்டான் மகா வித்தியாலயம்.
1982 சித்திரை மாதம் —
யா/மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.
1984 மாசி மாதம் —
யா/மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை.
1985 மார்கழி மாதம் —
அதிபர், யா / மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.

பிறந்த திகதி;- **29 — 11 — 1938**

## வளத்தோடு வாழ வைத்தவர்

வலி. வடக்கில் தலை நிமிர்ந்து நின்ற கல்லூரிகளில் முதன்மை வாய்ந்தது மகாஜனா. சமூகப் பின்னணியால் நிலை பெயர்ந்த போதும் மனந்தளரா அதிபரையும், ஆசிரியர்களையும், மாணவர்களையும் தன்னகத்தே கொண்டுள்ளமையால் இக் கல்லூரி கல்வி, கலைசார் துறைகளில் இன்றும் சிறந்த பெறுபேற்றைத் தருகின்றது. சாரணியத் துறையிலும் சிறந்து விளங்குகின்றது. இவ் வகை நலன்களுடன் இப்பாடசாலை தன்னெழில் குன்றாது மலர்ந்து மணம் வீசுவதற்குக் கடந்த பதின்மூன்று வருடங்களாக அதிபராகக் கடமையாற்றிய திரு.க. நாகராசா அவர்களுக்கும் பெரும் பங்குண்டு.

தன் சொந்த இடமான தெல்லிப்பழையில் மீள நிலை கொள்ளாவிட்டாலுங் கூடப் புகுந்த இடத்தில் அதனை வளத்தோடு வாழ வைத்த பெருமை அவருக்கே உரியது. அன்னார் அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றாலுங்கூடக் கல்விச் சேவையிலிருந்து ஓய்வு பெறாது தான் பெற்ற

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மாண்புறு தலைவ, வாழியவே!

நாநலமெனும் நலனுடைத்தாய் நானிலத்தில்
கல்விமானெனும் பெயருடைத்தாய்
கருவியும் காலமும் செய்கையும் சிறப்புற
திக்கெலாம் பரவும் புகழுடைத்தாய்
— மகாஜன
ராச்சியத்தின் மாண்புறு தலைவ, நீ ஆயினும்
காட்சியில் எளியனாய் கடுஞ்சொல்அல்லனாய்
சான்றோனாய் அதிகாலை முதல்
மாலைக்கப்பாலும்
மாணவர் பாரில் புகழ் பெறப் பெரும்
பணியாற்றி
கலங்கரைவிளக்கெனவே ஒளிவீசும் உருவுடனே
ஓயாதுழைத்து வந்த உத்தமனே
மகாஜனவில் நீர் பதித்த முத்திரைகள்
அறுகாக வேரூன்றி ஆலாகத்
தழைத்தோங்கும்
அகிலமெலாம் போற்றிடவே நீர் வாழியவே
ஏழிரண்டாண்டுகளில் நீர்செய்த சேவைகள்
ஏழேழு கன்மமும்பயன் பெறவே நீர்வாழியவே

வாழ்த்துவோர்:
**யா/மகாஜனக்கல்லூரி ஆசிரியர் கழகம்.**

## தளரா உள்ளத்தினர்

வலயம் இரண்டில் வனப்புடனும், வளமுடனும் மிளிர்ந்த கல்லூரி மகாஜனக், கல்லூரி. இதற்கு நீண்ட பெரிய பாரம்பரியமும் உழைப்பால் உயர்ந்த வரலாற்றுப் பின்னணியும் உண்டு. பாவலர் துரையப்பா பிள்ளையின் கனவு நனவாக்கப்பட்ட கல்விச்சோலை அது.

வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளராக விருந்த காலத்தே இடம் பெயர்ந்த நிலையிலும் தளரா உளத்தோடு தெங்கென உயர்ந்து காய்த்துக் குலுங்க வைத்த கடப்பாடு அதிபர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## A PRINCIPAL WHO WORKED FOR THE SOCIETY

Mr. Kathirgamathamby Nagarajah is retiring after serving very efficiently as the Principal of J/Mahajana College for 13 years. He was a famous old student of this College. He has served at Mahajana College as a teacher, Deputy Principal and Principal. During his Principalship he has devoted his full time for the development of his Alma mater. Mahajana College has been shining well in the field of Education, Sports, Aesthetic studies and Fine Arts during his period.

Mr. K. Nagarajah worked as the President and Treasurer of our Divisional Principal Association and Examination Committee respectively. Mahajana College has been facing several hardships due to the problems in the Country from 1990. But under the leadcrship of Mr. K. Nagarajah the College share well in the curricular and Co-Curricular activities after putting up structures at Maruthanarmadam.

He is recognized by the Students, Teachers,s P arents, Old Students, Well-wishers and the official of the Dept. of Education as one of the best Principals in the Island. He has proved himself as a Principal who is in par with late Mr. T. T. Jayaratnam, the former principal of Mahajana College. I wish Mr. K. Nagarajah and his family all success and a happy, peaceful and contented life.

A. Kamalanathan
Divisional Education Officer
Tellippalai.

## புகழ்பூத்த அதிபர் வரிசையில் ...

மகாஜனக் கல்லூரியில் பத்து வருடங்களுக்கு மேல் பதவி வகித்த புகழ் பூத்த அதிபர்கள் வரிசையில் ஸ்தாபகர் துரையப்பாபிள்ளை, அமரர் திரு. சா. சின்னப்பா, மகாஜன சிற்பி திரு. தெ. து. ஜயரத்தினம் ஆகியோரைத் தொடர்ந்து வருபவர் இளைப்பாறும் எமது அதிபர் திரு. க. நாகராசா அவர்களாவார்.

கிறிஸ்தவராக இருந்து தெல்லிப்பழை அமெரிக்க மிசன் பாடசாலை தலைமை ஆசிரியராக இருந்த பாவலர் அவர்கள், சைவராக மாறி எமது பாடசாலையை ஆரம்பித்த காலத்தில் எத்தனையோ இடர்ப்பாடுகள், எதிர்ப்புகள் மத்தியிலும் பாடசாலையை வளர்த்தது போலவும், மகாஜன சிற்பி திரு. தெ. து. ஜயரத்தினம் அவர்கள் பல பிரச்சினைகள் மத்தியிலும்

( 4ஆம் பக்கம் பார்க்க)

## அகல்விளக்காக ஒளி தந்தவர்

"தோன்றிற் புகழொடு தோன்றுக'' என்பது பொய்யாமொழிப் புலவரின் வாக்கு. அதற்கேற்ப ஏற்றமிகு புகழோடு விளங்கி எமது கல்லூரியைப்பதின்மூன்று ஆண்டுகள் ஆண்டு, ஓய்வு பெறும் அதிபர் திரு. க. நாகராசா அவர்கள், அர்ப்பணிப்பு மனதும், அன்பொழுகும் முகமும், பெருந்தன்மையும் கொண்டவர்.

மகாஜனக் கல்லூரியை சிக்கெனப் பிடித்து, நாட்டு நிலைவரத்தால் கல்லூரி நடந்த இருளடர்ந்த பாதைகளெங்கும் வழிகாட்டிய அகல் விளக்கு எங்கள் அதிபர். அவர் ஒய்வு பெறுவதை இட்டு நாம் மகிழ்ச்சியும், அதேநேரம் திறமைமிக்க அதிபரின் சேவையை நேரடியாகப் பெறும் சந்தர்ப்பத்தையும் இழக்கின்றோம் என வருத்தமும் அடைகின்றோம்.

அவர் நீண்ட ஆயுள்பெற்று எமது கல்லூரி வளர்ச்சியை கண்கூடு காண வேண்டுமென்று கல்லூரித் தெய்வமான சிவகாமி சமேத நடராஜப் பெருமானை மாணவர் ஆகிய நாம் வேண்டுகின்றோம்.

**மாணவர் சார்பில்**
**வை. சாரங்கன்,**
சிரேஷ்ட மாணவ தலைவன்

## திறந்த பல்கலைக்கழக முகாமைத்துவ டிப்ளோமா மாணவர்கள் பதிவு செய்க

முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் எதிர்வரும் 12, 13 ஆம் திகதிகளில் உரிய ஆவணங்களுடன் வருகை தந்து தம்மைப் பதிவு செய்து கொள்ளுமாறு திறந்த பல்கலைக்கழகப் பிராந்திய இயக்குநர் ச. ஆ. ஞானேந்திரன் கேட்டுள்ளார்.

கடந்த இரண்டு மாதத்திற்கு முன்னர் மேற்படி டிப்ளோமா கற்கை நெறியில் பயிலுவதற்கான அனுமதித்தேர்வுப் பரீட்சையில் 250 பேர் தோற்றியிருந்தனர்.

இப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு அதனை உறுதி செய்யும் கடிதத்தையும் பதிவுக்கான பணத்தைச் செலுத்துவதற்கான வவுச்சர் என்பனவற்றையும் நாவலவில் உள்ள திறந்த பல்கலைக்கழக தலைமையகம் அனுப்பி வைத்துள்ளது.

சித்தியடைந்தவர்கள் உரிய ஆவணங்களுடன் கொக்குவிலில் உள்ள திறந்த பல்கலைக்கழகப் பிராந்திய அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (ஐ·185)

## இளநீரைப் பருகியவர் உடைமைகளை இழந்தார்

### கொழும்பு--வவுனியா ரயிலில்

கொழும்பிலிருந்து வவுனியா நோக்கி வந்த இரவு ரயிலில் விற்பனை செய்த இளநீரை வாங்கிப்பருகிய ஒருவர் தமது உடைமைகளை இழந்த நிலையில் மயக்கமுற்று வவுனியா ரயில் நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

தாண்டிக்குளம் வாசியான நாகலிங்கம் கந்தசாமி எனும் முதியவருக்கே இப்பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது நேற்று முன்தினம் காலை வவுனியா வந்தடைந்த ரயிலில் மயக்கமுற்ற நிலையிலிருந்த இவரைப் பொலீஸார் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர்.

அண்மைக் காலமாக இதுபோன்ற சம்பவங்கள் இரவு ரயிலில் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ–10)

## மரக்கிளை முறிந்து வீழ்ந்து காயம்

தென்மராட்சி, நவ. 30

மரத்தின் மேலிருந்து பறிக்கப்பட்ட மாங்காய்களை ஏற்றிக் கொண்டு நின்றவர் மீது முறிந்த மரக்கிளை வீழ்ந்ததில் அவர் தலையில் படுகாயமடைந்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இச் சம்பவத்தில் சாவகச்சேரி தனங்கிளப்பு வீதியைச் சேர்ந்த க. சிவராசா (வயது 44) என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-117)

## அகவொளி கருத்தரங்கு

அரியாலை, நவ. 30

யாழ். பாங்ஷல் வீதியில் உள்ள 'அகவொளி' நிலையத்தில் எதிர்வரும் வியாழக்கிழமை 3 ஆம் திகதி பிற்பகல் 3. 30 மணிக்கு நடைபெறும் கருத்தரங்கில் 'குடும்பத்தில் போரினால் ஏற்படும் தாக்கங்கள்' என்ற தலைப்பில் வைத்திய கலாநிதி தயா சோமசுந்தரம் கருத்துரை வழங்குவார். (ஐ–17)

## பொறியியல் மாணவன் வவுனியாவில் கொலை!

வவுனியா, நவ. 30

விடுமுறையை அண்ணன் வீட்டில் கழிப்பதற்காக வவுனியாவுக்கு வந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மொறட்டுவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பொறியியல் பீடமுதலாம்வருடமாணவனும் —கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தைச் சேர்ந்தவருமான சத்தியநாதன் தமிழ்க்குமரன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

பல்கலைக்கழக விடுமுறையைக் கழிப்பதற்காக வவுனியா மாவட்டம் உக்கிழாங்குளம் பகுதியில் வசிக்கும் தனது அண்ணரின் வீட்டிற்கு வந்திருந்த மேற்படி மாணவன் கடந்த 25 ஆம் திகதி இரவு ரயில்மூலம் கொழும்புக்குச் செல்ல வவுனியா ரயில் நிலையத்திற்கு சென்றிருந்தார் எனவும்—

அடுத்த நாள் காலை உக்கிழாங்குளம் பகுதியில் உள்ள சிறுகாட்டுப் பகுதியில் தலையின் பின்பக்கத்தில் பலத்த காயமேற்பட்ட நிலையில் மேற்படி மாணவன் சடலமாகக் கிடந்தார் எனவும்— தெரிபவந்தது.

மேற்படி சம்பவத்தை அறிந்த மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்கள் குழு ஒன்று உடனடியாக வவுனியாவுக்குச் சென்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின உதவியுடன் மாணவனது சடலத்தை கிளிநொச்சிக்கு அனுப்பி வைத்ததாக மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி மாணவரின் கொலைக்கான காரணம் என்னவென்பது தெரிய வரவில்லை. (ஐ–7–164)

## செயற்பாட்டு கூட்டம்

தென்மராட்சி, நவ. 30

தென்மராட்சிப் பிரதேசத்தில் அடுத்த ஆண்டுமேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைகள் சம்பந்தமாக கிடைத்த முன்மொழிவுகள் பற்றிய பிரதேச வருடாந்த செயற்படு திட்டக் கூட்டம் எதிர்வரும் 2ஆம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் பிரதேச செயலக பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை, பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி, நடுத்தரகால முத

( 9 ஆம் பக்கம் பார்க்க)

# தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் அதிபர் க. நாகராசா அவர்களின் சிறப்பிதழ்

(மூன்றாம் பக்கத் தொடர்)

### தளரதஉள்ளத்தினர்...

க. நாகராசா அவர்களினது என்று எண்ணும் போது பெருமை தருகிறது. கல்விப்பணியில் செம்மையுற தம்மை ஈடுபடுத்திய கல்வியியலாளர் அவர். பாடசாலைச் சமூகத்தை மெத்தனமாக நடத்திச் செல்லவல்ல உத்தம அதிபர்களால் கல்விப்பணிப்பாளர்களின் பணி எளிதாக்கப்பட்டதெனலாம்.

அவர் நீண்ட கல்விச் சேவைக்குப் பின் இளைப்பாறுகிறார். கைம்மாறுவேண்டாக் கடப்பாடே அவரது இளைப்பாற்றுக் காலத்தை நடத்திச்செல்லும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. வாழ்க வளமுடன் என வாழ்த்துகின்றேன்.

**க. சுந்தசாமி**
மாகாணக் கல்விப்பணிப்பாளர்.
வடக்குகிழக்கு மாகாணம்.

### உழைப்பால் உயர்ந்த...

வர்களது கற்றல் திறன் விருத்திச் செயற்பாடுகள் அனைத்தும் மேம்பாடடைந்தன.

வலிகாமம் பிரதேசத்தில் கலங்கரை விளக்காகத் திகழும் இக் கல்லூரிக்கு இந்த அதிபர் அச்சாணியாகத் திகழ்ந்துள்ளார். தன்னடக்கம். தலைமைத்துவப்பண்பு, தகுதியான வழிகாட்டல், தாராள சிந்தை ஆகிய பண்புகளைக் கொண்டு தனது முகாமைத்துவ வலிமையினால் சலசலப்பில்லாமல் கருமங்களை நிறைவேற்றி நற்பணி புரிந்துள்ளார்.

கல்லூரியிலிருந்து ஓய்வுபெறும் அதிபர் திரு. கே. நாகராசா அவர்களின் கல்விப்பணிக்கு நன்றி தெரிவிப்பதுடன் மேலும் ஆரோக்கியத்துடனும் மனநிறைவுடனும் வாழவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**வி. இராசையா,**
வலயக் கல்விப்பணிப்பாளர்,
வலயம் வலிகாமம்.

### வாழ்த்துரை...

கழும் இவருடைய ஆளுமைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

கல்லூரி வாழ்விலிருந்து இவ்வாண்டு ஓய்வு பெறுகின்றார் என்பதை அறியும் போது கற்றறிந்தோர் உள்ளத்தில் ஏக்கமும் திகைப்பும் ஏற்படுவதை நான் நன்கு அறிவேன். என்றாலும் அன்னார் முன்னெடுத்துச்சென்ற மகாஜனக் கல்லூரி பணி அங்கு கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கின்ற சிவகாமி அம்பாள் சமேதராக விளங்குகின்ற நடராஜப் பெருமானின் திருவருளினால் என்றென்றும் சிறந்தோங்கி நிற்கும் என்பதில் மிகை ஒன்றுமில்லை.

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி (ச.நீ)**
தலைவர் ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

### புகழ் பூத்த...

கல்லூரியை அகில இலங்கையிலும் ஒரு முன்னணிக் கல்லூரியாக வளர்த்தது போலவும்— எமது அதிபரும் ஆசிரியர் பற்றாக்குறை, இடப்பெயர்வு போன்ற பல சிரமங்கள் மத்தியிலும் கல்லூரியின் உன்னதத் தன்மையைப் பேணி வந்தார்.

இடம் பெயர்வு காரணமாக ஆரம்பத்தில் கல்லூரி பல இடங்களில் வேறு பாடசாலைகளில் இயங்கிய போதும், கல்லூரியின் தனித்துவத்தை பேண விரும்பிய அதிபர் அவர்கள் 1994 இல் மருதனார் மடத்தில் தற்காலிக கொட்டகைகள் அமைத்துக் கல்லூரியை நடத்தி வந்தார். இவர் கல்விக்கே முதலிடம் கொடுத்தாலும் ஏனைய துறைகளிலும் மாணவரின் வளர்ச்சிக்காக உழைத்து வந்ததால் இன்று எமது கல்லூரி சகல துறைகளிலும் முன்னணியில் திகழ்கிறது. பாடசாலையின் தரத்தை மேன்மேலும் உயர்த்தவேண்டுமென்பதே இவரதுஅவாவாகும். சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாள்களில் கூட காலை 7.30 தொடக்கம் பி. ப. 4.00 மணி வரை பாடசாலையில் இருந்து கல்லூரியின் உயர்ச்சிக்காக உழைத்து வந்தார்

எமது அதிபர் எதற்கும் அஞ்சா நெஞ்சம் படைத்தவர். எப்போதும் மலர்ந்த முகத்துடன் எல்லோரிடமும் அன்பாகப் பழகும் சுபாவமுடையவர். இதனால் எல்லோரினதும் அன்பிற்கும், மரியாதைக்கும் உரிய ஒருவராகத் திகழ்கிறார்.

ஓய்வு பெறும் நமது அதிபர் சீரும் சிறப்புடனும் நீடூழி வாழவும் அவரின் விருப்பம் போல மகாஜன மாதா மேன் மேலும் வளர்ச்சியடையவும் எல்லாம் வல்ல சிவகாமி சமேத ஆனந்த நடராஜப் பெருமானைப் பிரார்த்திப்போமாக.

**பொ. சுந்தரலிங்கம்**
அதிபர்

### தற்காவலனாக...

ஐம்பெருங் காப்பியங்கள் தமிழை அழகு செய்வது போல, கல்லூரியின் கவினுக்குஊன்றுகோலாய் உந்து சக்தியாய் அமைவன ஆசிரியர், மாணவர், பெற்றோர், பழையமாணவர், நலன்விரும்பிகள் எனப்படுவோராவர், இத்திறத்தாரிடம் இங்கிதமாய் நடந்து கல்லூரிக்கு வாழ்வும், வளமும் சேர்த்துக் கொண்ட பெருமைக்குரிய திரு. க. நாகராசா அவர்கள் கல்லூரியின் கல்வித்தரத்தினையும், புறநிலைச் செயற்பாடுகளையும் தரமுயர்த்த அயராது உழைத்து வெற்றியும் கண்டவர்.

கற்றார் நயக்கும் கல்வியாளனாக, அன்பு பாலிக்கும் அதிபராக, எல்லாவற்றுக்கும் மேலாக சிறந்த தாளாண்மை மிக்க பேராளனாக வாழ்ந்து நிறைவான நிலையெய்திய பெரியோன் 28 – 11 – 98 இல் இளைப்பாறி உள்ளார். அன்னார் இளைப்பாற்றுக் காலத்தில் இறையருளால் இன்னலிலா இன்ப வாழ்வெய்துகவென இதயமார வாழ்த்துகின்றேன்.

**த. நா. போஜன் (ச. நீ)**
இணைச்செயலாளர்.
யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை,
பழைய மாணவர் சங்கம்.

### சாதனை படைத்த...

மகாஜன அன்னையை நல்ல நிலையில் வைத்திருக்க அவர் ஆதரவில் விட்டனர்.

அவர் அதிபர் பொறுப்பு ஏற்ற காலந்தொடக்கம் நாட்டு நிலைமை காரணமாக பல தொடர் சோதனைகள் வந்த பொழுதும் மனந்தளராது அவற்றைச்சவாலாக எடுத்து சாதனை படைத்து வந்ததை யாவரும் அறிவர்.

கல்லூரி இடம்பெயர நேரிட்ட பொழுது மாணவர் கல்வியின் முக்கியத்துவத்தை மனதிற்கொண்டு, கல்வி பாதிக்காத வகையில் வெவ்வேறு இடங்களுக்கு பாடசாலையை நகர்த்தி 1992, 1993 ஆண்டுகளில் கல்லூரியின் கல்வித்தரத்தை அகில இலங்கையில் ஒப்பிடக்கூடிய சில பாடசாலைகளில் ஒன்றாக விளங்க வைத்து சாதனை படைத்தார். கல்வி மாத்திரம் என்று இல்லாமல் விளையாட்டுத்துறை என்றாலும் சரி, ஆங்கிலதினம், தமிழ்த்தினப் போட்டிகள் என்றாலும் சரி அல்லது வேறு எந்த அறிவு சார் வினாவிடைப் போட்டிகளானாலும் சரி முன்னின்று ஊக்குவித்து வெற்றியும் கண்டு எங்கும் மகாஜன என்று ஒலிக்க வைத்ததும் அவரது சாதனையே.

எமது கல்லூரியின் தனித்துவத்தைப் பேணவும் செயல் திறனை வெளிப்படுத்தவும் மற்றொரு சாதனையாக மருதனார்மடச் சந்திக்கு அண்மையில் தற்காலிக கொட்டகைகளை அமைத்து எல்லோரும் வியந்து பேச வைத்தார். கல்லூரிக்கு நேர காலத்துடன் வந்தும், முடிந்த பின்பு சில மணித்தியாலங்கள் நின்றும், விடுமுலை நாள்கள் என்றும் பாராது கல்லூரியுடன் பிணைந்து 13 வருடங்கள் அதிபராக மகாஜன அன்னைக்கு பணிபுரிந்து கல்லூரிச் சமூகத்தினர் நம்பிக்கைக்கும் பாத்திரமாக இருந்த திரு. க. நாகராசா அவர்கள் 60 வது அகவையை எட்டியதும் ஓய்வு பெறுகின்றார்.

அவர்களும் அவர் தம் குடும்பத்தினரும் மேலும் பல சிறப்புக்கள் பெற்று பல்லாண்டுகள் வாழ எமது கல்லூரி வளாகத்தில் வீற்றிருக்கும் சிவகாமிசமேத நடராஜப்பெருமானை வாழ்த்திவணங்குகின்றேன்.

**செ. சிவபாலன்,**
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/மகாஜனக் கல்லூரி.

### வளத்தோடு...

இன்பம் தான் பிறந்த மண்ணின் மைந்தர்களும் பெறவேண்டும் என்ற உன்னத நோக்கோடு இனி வருங்காலத்திலும் இனிதே செயற்படுவாராக.

**ப. திலகநாயகம்**
பிரதேச செயலகம்,
வலி. வடக்கு.

# மேலதிகமாக உள்ள ஆசிரியர் பெப்ரவரிக்குள் இடமாற்றம்

## கல்வி அமைச்சர் சுற்றறிக்கை

கொழும்பு, நவ. 30

பாடசாலைகளில் மேலதிகமாக உள்ள ஆசிரியர்கள் அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்துக்குள் ஆசிரியப் பற்றாக்குறை உள்ள இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட வேண்டும்.

இவ்வாறுகல்வி, உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரன சகல மாகாணக் கல்விஅமைச்சுக்களையும் சுற்றறிக்கை மூலம் கேட்டுள்ளார்.

நகரப் புறப் பாடசாலைகளில் ஆசிரியர்கள் மேலதிகமாக உள்ளனர் என பல தடவை தனக்கு அறிவிக்கப்பட்டிருந்ததாகவும் —

தற்போது எடுத்துக் கொண்ட புதிய தரவுகளின் அடிப்படையில் இத்தகைய செய்திகள் ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் — அமைச்சர் தனது சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பெப்ருவரி மாதத்துக்குப் பின்னர் ஆசிரியப் பற்றாக்குறை உள்ள இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்படாத ஆசிரியர்களின் சம்பளத்தை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அமைச்சர் மாகாணக் கல்வி அமைச்சுக்களைப் பணித்துள்ளார்.

(இ-7)

## நாவலர் குருபூசைதினத்தில் திருமுறை முற்றோதல்

### இ. இ. பேரவை வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ. 30

நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலவ வேண்டியும், பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் துன்பங்கள் விலக வேண்டியும் ஆறுமுக நாவலர் குருபூசைத் தினமாகிய கார்த்திகை மாத பூரணை தினத்தன்று நாவலரால் தொகுக்கப்பட்ட திருமுறை முற்றோதலைமேற்கொள்ளுமாறு இந்து இளைஞர் பேரவை இந்து மக்களுக்கு வேண்டுகோள்விடுத்துள்ளது.

திருமுறைத் திரட்டுத் தேவையானோர் பேரவை அலுவலகத்திலும் சிவதொண்டன் நிலையத்திலும் தொடர்பு கொள்ளுமாறும் வேண்டப்படுகின்றனர்.

இதேவேளை—

இடப் பெயர்வுக்குப் பின்னர் பூசை வழிபாடுகள ஆரம்பிக்கப்படாதிருக்கும் ஆலயங்களில் விவரங்களை ஆலய அறங்காவல் குழுவினர் இந்து இளைஞர் பேரவைக்கு அறிவிப்பதுடன் கொழும்பிலுள்ள இந்து கலாசார அமைச்சுக்கும் அனுப்பிவைக்குமாறும் மேற்படி பேரவை வேண்டுகொள் விடுத்துள்ளது.

(ஐ-5-30)

## பூநகரியில் ஷெல் தாக்கு!

வவுனியா, நவ. 30

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து கடந்த வெள்ளி இரவு 9.50 மணியளவில் பூநகரி பகுதி மீது ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(இ-9)

## முதலாவது மூன்றாவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்



**தவச்செல்வம் நிருசனன்**
30 - 11 - 1998

**தவச்செல்வம் தமிழ்ச்செல்வன்**
19 - 11 - 1998

உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த தவச்செல்வம் புஸ்பராணி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வன் நிருசனன் (நிரு) தனது முதலாவது பிறந்த நாளையும் தமிழ்ச்செல்வன் (பூங்குன்றன்) தனது மூன்றாவது பிறந்த நாளையும் தமது இல்லத்தில் வெகு சிறப்பாக கொண்டாடுகின்றார்கள். இவர்களை அன்பு அப்பா, ஆசை அம்மா உரும்பிராய் அப்பம்மா, கொம்மாந்துறையிலுள்ள அம்மய்யா, அம்மம்மா, பெரியமாமா குடும்பத்தினர், சின்னமாமா குடும்பத்தினர், தேவு மாமா குடும்பத்தினர், துரைமாமா குடும்பத்தினர், பழச் சித்தி, அருந்தவச்சித்தி, ராணிச்சித்தி சாவகச்சேரியிலிருக்கும் குலச் சித்தப்பா குடும்பத்தினர், நோர்வே கிளி மாமா, நோர்வே செல்வி அத்தை, சுவிஸ் பெரியப்பா குடும்பத்தினர், லண்டன் கவிமாமா, உரும்பிராய் அஞ்சலதிபர், உப அஞ்சலதிபர், அஞ்சலர்கள், அலுவலக சிற்றூழியர், நண்பர்கள், உற்றார், உறவினர்கள், அனைவரும் நிருசனையும் தமிழ்ச்செல்வனையும் உரும்பிராய் கற்பகப்பிள்ளையார் அருள் பெற்று பல்கலைகளையும் கற்று பல்லாண்டு காலம்சிருஞ் சிறப்பும் பெற்று வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்
செ. தவச்செல்வம்
(தந்தை)

உரும்பிராய் வடக்கு,

(60738)

# செய்திக் கொத்து

### கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

நெல்லியடி, நவ. 30

பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இரு இடங்களில் கடந்த வாரம்காலை 35 கட்டாக்காலிநாய்கள் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டுள்ளன.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொறுப்பதிகாரிஎஸ். ராஜேந்திரம் சுகாதாரப் பரிசோதகர் எஸ். செல்வரெணம் உட்பட சுகாதார பரிசோதகர் பயிலுநர்களும்இணைந்தே நஞ்சு மருந்தைப் பயன்படுத்தி மந்திகை மரக்கறிச் சந்தையிலும்மந்திகை மருத்துவ மனையிலும், திரிந்த கட்டாக் காலி நாய்களைக் கொன்றனர்.

(ஐ-109)

### விவசாய ஓய்வூதியம்

தென்மராட்சி, நவ. 30

தென்மராட்சிப் பிரதேசத்தில் விவசாய ஓய்வூதியம் செலுத்தியோரில் 30 விவசாயிகளுக்கு விவசாய ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது.

விவசாய ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவுகளை அந்தந்தப் பிரிவு தபால் நிலையங்கள் மூலம் வழங்க கமத்தொழில் காப்புறுதிச் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

### பற் சுகாதார போதனை

திருநெல்வேலி, நவ. 30

இணுவில் அரசினர் மத்திய மருந்துச் சாலையில் கடந்த வாரம் நடைபெற்ற தாய்-சேய் சிகிச்சைக் கிளினிக்கில் 'சிறுவர்களின் பற்சுகாதாரத்திற்கு பெற்றோரே பொறுப்பு' என்ற தலையங்கத்திற் பற் சுகாதாரம் பற்றிய போதனையும் செயல்முறை விளக்கமும் வழங்கப்பட்டன.மருந்துச் சாலையின் பொறுப்பதிகாரி டாக்டர் திருமதி ஜே. நித்தியானந்தன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மருதனார் மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியிலுள்ள மாணவருக்கான பற்சிகிச்சை நிலைய பற்சிகிச்சையாளர் திருமதி எஸ். பஞ்சலிங்கம், குடும்ப நல சேவை உத்தியோகத்தர்கள் ஆகியோர் கருத்துரை நிகழ்த்தினார்கள்.

(ஐ-135)

### மாணவர் ஒன்றுகூடல்

தென்மராட்சி, நவ. 30

பளை மாசார் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் ஜி. சி. ஈ. சாதாரண தர வகுப்பு மாணவர் மன்ற ஒன்றுகூடல் வைபவம் கடந்த புதன்கிழமை பாடசாலை மண்டபத்தில் மன்றத் தலைவர் இ. கமலேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இவ்வைபவத்திற்கு முதன்மை விருந்தினராக பளைக் கோட்டக் கல்வி அலுவலர் அ. கயிலாயபிள்ளையும், சிறந்த விருந்தினர்களாக கோட்டக் கல்வி அலுவலக சிரேஷ்ட அலுவலர்களான எஸ். சிவராசா, எஸ். தமர்கீர்த்தி, பளை மத்திய கல்லூரி அதிபர் க. குணபாலசிங்கம், முகாவில் அ. த. க. பாடசாலை அதிபர் சி. தாமோதரம்பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஐ-117)

### நவில்ட் மாணவர்கள் முதலிடம்

சாவகச்சேரி, நவ. 30

கைதடி நவில்ட் பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற சாரணர்களின் வருடாந்த விழாவில் கைதடி நவீல்ட் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் அங்கு இடம் பெற்ற நிலைக் காட்சியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டனர்.

( ஐ-31 )

### கல்லூரிக்கு விளையாட்டு முகாமையாளர்

வடமராட்சி, நவ. 30

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் விளையாட்டுக்களை பயிற்றுவிக்க விளையாட்டு முகாமையாளர் ஒருவர் விரைவில் நியமிக்கப்படவுள்ளார்.

விளையாட்டுக்களைப் போதிப்பதற்கு பயிற்றப்பட்ட உடற்கல்வி ஆசிரியர் இன்மையால் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் விளையாட்டுக்களைப் பயிற்றுவிக்கவென ஒப்பந்த அடிப்படையில் இப்பதவிக்கான நியமனத்தை வழங்கவுள்ளது.

(ஐ-173-118)

### ஒளி விழா

சண்டிலிப்பாய். நவ. 30

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் கிறிஸ்மஸ் ஒளி விழா அண்மையில் கல்லூரி அதிபர் செல்வி பொ. கந்தசாமி தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் பிரதம அதிதியாக சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட பிரதி கல்விப் பணிப்பாளர் திருமதி றெயினா இருதயநாதன் கலந்து கொண்டார். பண்டத்தரிப்பு பங்குத் தந்தை வண.பிதா றோக் அடிகளார், தென்னிந்திய திருச்சபையின் பண்டத்தரிப்பு போதகர் எஸ். அசோக்குமார் ஆகியோர் இதில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்

(ஐ - 135)

### வீதி திருத்தம்

அரியாலை, நவ 30

யாழ். முனியப்பர் ஆலயத்திற்கு செல்லும் நடைபாதையை செப்பனிட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

பிரதானவீதியில் இருந்து ஆலயத்திற்குச் செல்லும் பாதைக்கு தற்போது கற்கள் பறிக்கப்பட்டு புதிய வீதி அமைக்கப்பட்டு வருகிறது.

(ஐ-17)

### வாய்ச் சுகாதார வாரம்

திருநெல்வேலி, நவ. 30

நெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள தாய் சேய் சிகிச்சை நிலையங்களிலும். ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் வாய்ச் சுகாதாரம். பற் சூத்தை, முரசு வியாதி ஆகியன பற்றிய போதனைகள் குடும்ப நல சேவை உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுகாதாரத்திணைக்களம் இம்மாதத்தை வாய்ச் சுகாதார மாதமாக பிரகடனப்படுத்தியிருப்பதை முன்னிட்டு இப்போதனைகளும், பிரசார வேலைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஐ-135(

# சின்னஞ் சிறு விளம்பரம்

## திருமண சேவை

அச்சுவினி 2 ஆம் பாதம் 2 இல் செவ்வாய் (பாவம் குறைந்த) 26 வயது பட்டதாரி மகளுக்கு பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். மேற்படி நட்சத்திரத்திற்குப் பொருத்தமான உள்ளூர் நிரந்தர அரச உத்தியோகத்தர், ஆசிரியர், வங்கி ஊழியர், அரச கூட்டுத்தாபன பிரத்தியேக, நல்ல ஸ்தாபனத்தில் வேலை செய்வோர் தமது சாதக குறிப்புடனும், விவரங்களுடனும் தொடர்புகொள்ளவும்: இல. 821, மே / பா. உதயன். 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (60975)

## சங்கீதம்

ஆண்டு 11 இல் சங்கீதம் கற்கும் மாணவர்களுக்கு செய்முறை. அறிமுறை விடயங்களும், கடந்த மூன்று வருட வினா விடைகளும் உள்ளடக்கிய, ஆசிரியை கிருஷ்ணவேணி மயில்வாகனத்தின் 'கர்நாடக சங்கீதம்' வெளிவந்துவிட்டது. வாங்கிப் பயனடையுங்கள். (60937)

## கடன் திட்டம்

மகளிர் அபிவிருத்தி மன்றம் வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவிலும் கடன் திட்டம் ஒன்றை அறிமுகம் செய்துள்ளது.

கடந்தகால வன்செயல் காரணமாக விதவைகளாகிய பெண்களின் வருமான எல்லையை அதிகரிக்கும் நோக்கில் இக்கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக வட்டு. தென் மேற்கு, பண்ணாகம், சுழிபுரம் கிழக்கு, சங்கானை மத்தி ,வட்டு. வடக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தலா ஒவ்வொருவருக்கு இக்கடன் வழங்கப்படவுள்ளது. காலகதியில் இக்கடன் திட்டம் மேலும் விஸ்தரிக்கப்பட விருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஜ-99)

## நாடகம்

உதயனில் நாடகம் பற்றிய கட்டுரை வாசித்தீர்களா? அதை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள் 1) யாழ்ப்பாணமா கொழும்பா? எங்கள் வாழ்வைச் சித்திரிக்கும் 7 நாடகங்கள். 2) நாடகம் எழுதுவது எப்படி? என்பதை விளக்கும் நூல் ரூபா 50. (60993)

## விற்பனைக்கு

எமதுசங்கத்தில் ஆடம்பெரு. மாட்டெரு விற்பனைக்கு உண்டு தேவைப்படுவோர் 04.12 98ஆம் திகதிக்கு முன் எருவைப்பார்வையிட்டுவிலை விவரங்களைச் சமர்ப்பிக்கவும். பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. (சி/5633)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

இவ்வருடம் நடைபெற்ற ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய
யா/ பண்ணாகம் மெய்கண்டான்
மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த

சூ. சௌதாமினி — கோ. செல்வபவன்
கி. சஞ்சீவன் — கு. சயந்தா
த. பிரதீபா — ம. பிருந்தாவன்

ஆகிய மாணவர்களையும் இவர்களது வெற்றிக்கு வழிகாட்டியாக விளங்கிய அதிபர் கா. நடராசா, உபஅதிபர், ஆசிரியர்கள் ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை வளர்ச்சியில் பூரிப்படையும்
**பழைய மாணவிகள்**

பண்ணாகம். (சி-5638)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். பல்கலைக்கழகத்தின்
மெய்யியற்றுறை விரிவுரையாளராகிய
**திரு. நாகநாதன் ஞானக்குமார் அவர்கள்**
பேராசிரியராக பதவி உயர்வு பெற்றதையிட்டு அவரை மனமாரவாழ்த்துகின்றோம்.

**பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம்,**
**பருத்தித்துறை.**

(சி/5651)

# 5 ஆம் 2ஆம் ஆண்டு நினைவஞ்சலிகள்





அமரர்
**கந்தர் கிருஷ்ணர்**
1906–12–24
1993–11–25
கார்த்திகை பூர்வபக்க துவாதசி
திதி: 30–11–98

◄ அன்னை மடியில் ►
◄ ஆண்டவன் அரவணைப்பில் ►
◄ சிரார்த்த திதி: ►

திருமதி
**செல்லம்மா கிருஷ்ணர்**
1916–01–20
1996–04–15
சித்திரை அபரபக்க துவாதசி

" அன்னையும் தந்தையும் தானே — பாரில்
அண்ட சராசரம் கண்கண்ட தெய்வம்! "

உங்கள் பொன்மனப் பாங்கும்
புன்னகை முகமும்
பொன்னகை போற் பொலிவும்
இன்னமுத எழில் தோற்றமும்
விருந்தினரை இன்முகங் காட்டி
வரவேற்று உபசரிக்கும் பண்பினையும்
நாம் என்றும் மறவோம்!
ஓம்! சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பாசமிகு
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,**
**கொப்பாட்டப் பிள்ளைகள்,**
**உறவினர், நண்பர்கள்.**

காரைநகர் மத்தி,
காரைநகர். [ 60888 ]

# கொழும்பு செல்வோர் தங்க அரச செலவில் விடுதி

கொழும்பு, நவ. 30

வடக்கு – கிழக்குப் பகுதிகளில் இருந்துகொழும்புவரும் தமிழ் மக்கள் தங்குவதற்காக ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் கொழும்பில் விடுதி ஒன்று அமைக்கப்பட உள்ளதாக சமூக சேவைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கு பகுதிகளில் இருந்து கொழும்பு வரும் தமிழ் மக்கள் வசதிகளுடன் கூடிய தங்குமிடமின்றி பல் வேறுபட்ட இன்னல்களை எதிர்நோக்குகின்றனர் எனவும்–

அவர்களுக்கு உதவி புரியும் நோக்கில் சகல வசதிகளுடனும் கூடிய இந்த விடுதி அமைக்கப்பட உள்ளதாகவும்–

சமூக சேவைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

தெஹிவளையில் இந்த விடுதியினை அமைக்கத் தீர்மானித்து கட்டடம் ஒன்று வாங்கப்பட்டு தற்சமயம் கட்டடம் திருத்தியமைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9-10)

# மட்டுவிலுக்கு விரைவில் மின்

தென்மராட்சி, நவ. 28

மட்டுவில் பகுதிக்கு விரைவில் மின்சாரம் வழங்கப்படவுள்ளது. மின்சாரம் வழங்குவதற்கான மின்கம்பங்கள் நுணாவில் சந்தியிலிருந்து கனகன்புளியடிச் சந்தி வரை இலங்கை மின்சார சபையினால் கொண்டு வந்து சேர்க்கப்பட்டுள்ளன. (ஐ-117)

## மோட்டார் வண்டி உரிமையாளர்களுக்கு

1998–12–14 ஆம் திகதி முதல் 1998–12–24 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள க. பொ. த. (சா/த) பரீட்சை தொடர்பான ஆவணங்களை இணைப்பு நிலையங்களுக்கு ஏற்றி இறக்குவதற்கு மோட்டார் வண்டிகளை வாடகைக்கு அமர்த்துவதற்கான கூறு விலைகள் கோரப்படுகின்றன. உரிய படிவத்தினை யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிமனையில் பெற்று விண்ணப்பிக்கும் வண்ணம் விருப்பமான மோட்டார் வண்டி உரிமையாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கல்விப்பணிப்பாளர்
யாழ்ப்பாண வலய கல்வி
அலுவலகம்.

(சி/5641)

## வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி
## மலைவேம்பு ஏலவிற்பனை அறிவித்தல்

எமக்குச் சொந்தமான ஆவரங்கால் மீன் சந்தைக் காணியில் இருந்த மலைவேம்பு ஒன்று எதிர்வரும் 02-12-1998 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு அவ்விடத்தில் ஏலத்தில் விற்பனை செய்யப்படும். ஏலத்தில் கலந்து கொள்வோரில், சித்திகரக் கேள்விக்காரராகத்தெரிவு செய்யப்படுபவர், 24 மணி நேரத்துக்குள் முழுப்பணத்தையும் செலுத்தி வேம்பினை அப்புறப்படுத்துதல் வேண்டும்.

மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்திலும் புத்தூர் உப அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

வலி. கிழக்கு பிரதேசசபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி,
27-11-1998

பூ. குணசிங்கம்
தவிசாளர்
(சி-5649)

## யா\கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய
(ஸ்ரான்லி)
## வெற்றிக்குரியவர்களை வாழ்த்துகிறோம்

பாடசாலை மாணவர்களின் ஆக்கத்திறனையும் எழுத்தாற்றலையும் ஊக்குவிக்கும் கற்றலுக்கான கற்றல் அறிவு மலர்ச்சி நிகழ்ச்சித் திட்டத்தில் கொழும்புப் பத்திரிகை ஒன்று நடத்திய மாணவர்களுக்கான போட்டியில் பங்கேற்ற **52** பாடசாலைகளுள் ஒரே ஒரு பாடசாலையாக யாழ். மாவட்டத்தில் சிறப்பாக தெரிவு செய்யப்பட்டு பத்தாயிரம் (**10, 000. 00**) ரூபா பரிசினை பெற்றெடுத்த பாடசாலை மாணவர்களை, இவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் வழங்கி நெறிப்படுத்தி வெற்றிபெற வைத்த அதிபர், ஆசிரியர்கள் வரிசையில்

வழிகாட்டியாக விளங்கிய:

Ⓒ அதிபர் வி. மாணிக்கம் **அவர்களையும்**

தமிழ்த்துறையில் நெறிப்படுத்திய ஆசிரியர்

Ⓒ 'மதுரகவி' காரை. எம். பி. அருளானந்தன் **அவர்களையும்**

உடற்கல்வி துறைசார்ந்த ஆசிரியர்

Ⓒ எம். எஸ். ஏ. ஒஸ்வோல்ட் **அவர்களையும்**

பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

வாழ்த்துவோர்:

**சிவகுமார் ஸ்ரோர்ஸ்**

யாழ். நகரின் வர்த்தக வியாபார முன்னோடிகள்,
இல. 282, **ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

( 60989 )

# உதயன்

## திருந்தவே மாட்டார்கள்!

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக, பொதுமக்கள் ஐக்கியமுன்னணி அரசாங்கம் தயாரித்துள்ள அதிகாரப்பரவல் திட்டம் தமிழர்களுக்குரிய உரிமைகளை வழங்குகின்றதா, தமிழர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதா என்பது தனி விவகாரம்.

உத்தேச புதிய அரசமைப்புச் சட்டத்தின் ஒரு பகுதியாக தயாரிக்கப்பட்டுள்ள அதிகாரப்பரவல் திட்டத்தை, நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் தேவை.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவு நல்காவிடில் அதிகாரப்பரவல் திட்டம் வெறும் புஸ்வாணமாகவே போகும் என்பது தெரிந்ததே.

அரசின் தீர்வுத்திட்டத்திற்கு ஆதரவு தருமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்காவுக்கு ஜனாதிபதி விடுத்த இறுதி வேண்டுகோளையும் அவர் நிராகரித்துவிட்டார். கிராம அரசாங்கங்கள் அமைப்பதுதான் தமது கட்சியின் திட்டம் என்று சிறுபிள்ளைத்தனமாகக் கூறியுள்ளார் அவர்!

ரணில் விக்கிரமசிங்காவுக்கு இறுதிவேண்டுகோள் விடுத்துப்பேசுகையில், தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஐக்கியதேசியக் கட்சி ஒத்துழைப்பு நல்காவிடில், மக்கள் ஒத்துழைப்புடன் அரசின் அதிகாரப்பரவல் திட்டத்தை நிறைவேற்றப்போவதாக ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார். ஆனால் அதனை எவ்வாறு செய்யப்போகிறார் என்பதனைத் தெரிவிக்கவில்லை!

ஜனாதிபதி மக்கள் ஒத்துழைப்புடன் அதிகாரப் பரவல்திட்டத்தை நிறைவேற்றப் போவதாகக் கூறியபின்னர் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்து, அரசமைப்பு, நீதித்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், தீர்வுத் திட்டத்தை முழுமையாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியாது என்று சொல்லியுள்ளார்.

அரசாங்க உயர் மட்டத்தில் உள்ளவர்களே ஒருவருக்கு ஒருவர் முரணான தகவல்களைத் தெரிவிக்கிறார்கள். அவர்களுக்குள்ளேயே இது குறித்து ஒரே விதமான கருத்தில்லை; தீர்மானமும் இல்லை,

ஐக்கிய தேசியக் கட்சியோ, தானே பத்து வருடங்களுக்கு முன்னர் கொண்டு வந்த பதின்மூன்றாவது திருத்தத்திலிருந்து கீழிறங்கிச் செல்ல முற்படுகிறது. அந்தக் கட்சியின் ஒத்துழைப்பைப் பெற்று அரசு தனது தீர்வுத் திட்டத்தை நிறைவேற்றுவது என்பது நடவாத காரியம்.

நாடு இந்தளவு மோசமான நிலைக்கு வந்த பின்னரும், தமிழர் பிரச்சினையை உதைபந்தாக விளையாடி தாம் ஆட்சி அதிகாரத்தை அனுபவிக்கவே தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் விரும்புகிறார்கள். அதனை நாடியே செயற்படுகிறார்கள்.

நாட்டின் மீதும் மக்கள் மீதும் உண்மையான பற்றும் விசுவாசமும் வளரும் வரை, சிங்களத்தலைவர்கள் திருந்தப்போவதில்லை. ஆகையால் அவர்கள் தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைப்பார்கள் என்று எதிர்பார்க்கவும் முடியாது.

## இறந்த பெண்ணின் கண்களில் ஒன்று குடும்பஸ்தருக்குப் பொருத்தப்பட்டது

யாழ்ப்பாணம். நவ. 30

யாழ். போதனா வைத்தியசாலையில் தானமாக வழங்கப்பட்ட திருமதி பதுமநிதி மகாலிங்கத்தின் கண்களில் ஒன்று பார்வையிழந்த ஒருவருக்குப் பொருத்தப்பட்டுள்ளது.

சாவகச்சேரியைச் சேர்ந்த பூதத்தம்பி நாகராசா (வயது 43) என்ற குடும்பஸ்தருக்கே சத்திர சிகிச்சை மூலம் இந்தக்கண் பொருத்தப்பட்டது.

இவர் 1992ஆம் ஆண்டு வண்டு ஒன்று வலது கண்ணில் அடித்ததால் ஏற்பட்ட காயத்துக்கு சிகிச்சை செய்து சுகமடைந்திருந்தார்.

7 வருடங்களின் பின் கடந்த செப்ரெம்பர் மாதம் அதே கண்ணில், முன்பு காயமடைந்து மாறிய இடத்தில் புண் ஒன்று ஆரம்பித்ததை அடுத்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார். எனினும் கண்பார்வை ஒரு மாதத்தின் பின் மறைந்து விட்டது. இவர் கண்சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்த சமயம் அங்கே மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது இவர் ஒரு நீரிழிவு நோயாளியெனக்கண்டுபிடிக்கப்பட்டது.

நீரிழிவு நோயைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்தே இவரது கண் மாற்றுச்சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை, இடம்பெற்ற இந்தக் கண் மாற்றுச் சிகிச்சையில், பொருத்தப்பட்ட கண் தற்போது நல்ல முறையில் இருப்பதாகவும்—

இது வெற்றி அளிக்கும் எனவும் கண்மாற்றுச் சிகிச்சையை மேற்கொண்ட யாழ். போதனா வைத்தியசாலை கண் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் குகதாசன் உதயனுக்கு தெரிவித்தார்.

மேலும் பிரஸ்தாப பெண்ணின் மற்றைய கண் பொருத்தப்படாத நிலையிலேயே இருப்பதாகவும்—

இக்கண்ணைப் பொருத்துவதற்குரிய நோயாளி இன்னும் வந்து சேரவில்லை எனவும்—

நெடுந்தீவைச் சேர்ந்த இந்நோயாளி போக்குவரத்து தடைப்பட்டிருப்பதினால் யாழ்ப்பாணம் வந்துசேர முடியாத நிலையில் இருப்பதாகவும், —தெரிவிக்கப்பட்டது. (இ-15)

### திறந்த பல்கலைக்கழக

## பிராந்திய நிலையத்துக்கு தொலைபேசிவசதிஇல்லை

கொக்குவிலில் இயங்கும் திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்துக்கு இதுவரை தொலைபேசி வசதி வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அவசர அலுவல்கள் உத்தியோக பூர்வ விடயங்கள் தொடர்பாக நாவல தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு செயற்படுவதில் தாமதங்கள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-185)

## அனுருத்தவின் கண்டி இல்லம் அருகே குண்டு

### பொலீஸார் மீட்டனர்

கொழும்பு, நவ. 30

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவின் கண்டி இல்லத்துக்கு அருகே புதைக்கப்பட்டிருந்த சக்தி வாய்ந்த குண்டு ஒன்றை கட்டுகஸ்தோட்டப் பொலீஸாரால் கடந்த வெள்ளி இரவு மீட்கப்பட்டது.

பொலீஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்தே குறிப்பிட்ட இடத்தில் சோதனை நடத்தப்பட்டதாகவும் அச்சமயம் குண்டு மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மீட்கப்பட்ட குண்டு மறுநாள் சனி காலை செயலிழக்கச் செய்யப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பாக கட்டுகஸ்தோட்டைப் பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. (ஐ-10)

## கைதடி மக்களுக்கு மருத்துவ முகாம்

தென்மராட்சி, நவ. 30

கைதடிப் பகுதி மக்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாம் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் டிசம்பர் இருபதாம் (20/12) திகதி ஞாயிற்றுக்கிழமை கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயத்தில் நடத்தப்படவுள்ளது.

பரிசோதனை முகாமில் கண், நீரழிவு, வாய்ப்புற்று, தொழுநோய், இரத்த அழுத்தம், பொது மருத்துவம் ஆகியவற்றுக்கான பரிசோதனைகள் லயன்ஸ் கழக டாக்டர்கள், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடமாணவர்கள், யாழ். கண் பரிசோதனை நிறுவன பிரதிநிதிகள் ஆகியோரால் நடத்தப்படவிருப்பதால் பரிசோதனைகளில் கலந்து கொள்ள விரும்புவோர் தத்தமது பிரிவு கிராம அலுவலரிடம் தமது பெயர்களைப் பதிவு பெய்து கொள்ளுமாறு கழகச் செயலாளர் தெரிவித்தார்.

கைதடிப் பகுதியைச் சேர்ந்த எட்டுக் கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் கூட்டாக விடுத்த வேண்டுகோளையடுத்து இந்தப் பரிசோதனை முகாம் நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. — (ஐ-117)

### நாளை

கார்த்திகை 15
செவ்வாய்க்கிழமை

திதி: திரயோதசி
பின்னிரவு : 2.21 வரை
நட்சத்திரம்: அச்சுவினி
பிற்பகல் 12.49 வரை
சுபநேரம்: 10.44– 12.14
ராகுகாலம்: 3.14– 4.44
பகலுக்கு இரவுக்கும் பழைய நேரப்படி)

நாம் பலவீனமாக இருக்கும் போதுதான் பலாத்காரத்தைப் பற்றிச் சிந்திக்கின்றோம்.

-ராஜாஜி

## மீனவர் விவரங்கள் பதிவு

குருநகர், நவ. 30

குருநகர் பகுதியில் மீன்பிடித் தொழில் செய்து தற்போது தொழில் தடை காரணமாக மீன் பிடிக்கச் செல்லாமலுள்ள மீனவர் விவரங்களை பதிவு செய்யும் வேலையை இங்குள்ள மீனவர் சங்கங்கள் ஆரம்பித்துள்ளன.

இப் பதிவின் போது தொழில் செய்யும் மீனவர்களை மட்டும் இனங்காண வசதியாக குருநகர் பகுதியில் மீன்பிடி அனுமதிப்பத்திரம் (கடல் பாஸ்) வைத்திருக்கும் தொழிலாளர்கள் மட்டுமே பதிவு செய்யப்படுகிறார்கள் என இச் சங்கங்கள் மேலும் தெரிவித்தன.

மொத்தப் புள்ளி விவரங்களின்படி குருநகரில் மீன்பிடித் தொழில் செய்பவர்களின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 900 என குருநகர் கடற்றொழிலாளர் சங்கங்கள் தெரிவித்தன, (ஐ-51)

## வாசகர் திருமுகம்

## ரயர்களை எரிப்பதும் கார்த்திகை தீப விழாவா?

எதிர்வரும் வியாழக்கிழமை (3-12-98) சைவ மக்களின் முக்கிய சமய விழாக்களில் ஒன்றான கார்த்திகை விளக்கீடு என்று சொல்லப்படும் கார்த்திகைத் தீப விழா நடைபெறவுள்ளது.

'நான்தான் பெரியவன்' என்று பிரமாவும், விஷ்ணுவும் தமக்குள்ளே போட்டியிட்டுக் கொண்டிருந்த போது ''இச்சோதியின் அடிமுடியைக் காண்பவரே பெரியவர்'' என்று அசரீரியாகக்கூறி பெரும்சோதி வடிவாக சிவபெருமான் தோன்றினார்.

அடிமுடிகளைத்தேடி இயலாத நிலையில், தமது ஆணவம் அகன்ற நிலையில் பிரமா, விஷ்ணுக்கள் நின்றபோது 'இங்குற்றேன்' என லிங்கத்தே தோன்றிக் காட்சியளித்தார் சிவபெருமான்.

வருடந்தோறும் கார்த்திகை மாதத்தின் கார்த்திகை நட்சத்திரத்தன்று பிரமா விஷ்ணுக்களுக்கு சிவன் காட்டுகின்ற சோதி வடிவத்தை, நாம் வீடுகளிலும், ஆலயங்களிலும் தீபம் ஏற்றி வழிபடுகின்றோம்.

மதில்களிலும் மாடங்களிலும் சிறுசட்டிகள் வைத்துத் தீபம் ஏற்றி அந்த தீப ஒளியில் தீப அலங்காரத்தில் மனம் நெகிழப்பெற்று சிவனை வழிபடுகின்றார்கள் சைவ மக்கள்.

சில வருடங்களாக, இத் தீப விழாவை நாம் கொச்சைப்படுத்தி வருகின்றோம். வீதிகளில், சந்திகளில் ரயர்களைப் போட்டுக் கொளுத்துவதும் சைக்கிள் ரயர்களைக் கொளுத்தி கூக்குரலிட்டுக்கொண்டு வீதிகளில் சென்று மரங்கள் மீது எறிந்து ஆரவாரம் செய்வதுமாக எமது சிறந்த மத விழாவை கொச்சைப் படுத்துகின்றோம்.

இவ்வாறு நடைபெறும் இழி செயலை நிறுத்துவதற்கு சைவ மக்கள் கூடிய அக்கறை கொள்ள வேண்டும், ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும். குருமார்கள் ஆலயங்களில் அறிவுரை கூறவேண்டும். சைவ சமய நிறுவனங்கள் ஆவன செய்ய வேண்டும். இந்து இளைஞர் மன்றங்கள் இளைஞர்களுக்குவேண்டுகோள் விடுக்கவேண்டும். பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்குப் புத்தி சொல்லவேண்டும். இந்த இழி நிலை ஒழிக்கப்படவேண்டும்.

கே. நவராஜ்

விவேகானந்தர் வீதி,
இணுவில்.

## பழைய மின் தூண்களைப் பாடசாலைகளுக்கு வழங்குக

யாழ். குடாநாட்டுக்கான மின் விநியோக முறை கடந்த கால அனர்த்தங்களினால் முற்றாகத் தடைப்பட்டிருந்தது. இனிமேல் மின்சாரத்தைப் பெற முடியுமா? என்று மக்கள் சந்தேகத்துடனேயே இருந்தனர். ஆனால் இலங்கை மின்சார சபையின் வட பிரதேச அலுவலகத்தினர் 24 மணிநேர மின் விநியோகத்தை மக்கள் எதிர்பார்க்காத அளவுக்கு ஏற்படுத்தித் தந்துள்ளனர். இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள், ஊழியர்கள் அனைவரையும் பாராட்டி நன்றி தெரிவிக்க வேண்டியது யாழ். மக்களின் கடப்பாடாகும்.

யாழ் குடாநாட்டில் ஒரு போதும் நிகழாதவாறு இம்முறை பழைய மின் தூண்கள் அனைத்தும் அகற்றப்பட்டு புதிய மின்தூண்கள் நிறுத்தப்படுகின்றன. அகற்றப்படும் பழைய மின் தூண்கள் கொட்டகைகளுக்கு தூண்களாக உபயோகிக்கத் தக்கவையாக இருக்கின்றன. சிமெந்து விலை உயர்ந்து காணப்படுவதால் இப் பழைய மின் தூண்களை எமது பகுதியிலுள்ள வளமாகக் கருதி உபயோகமான முறையில் பயன்படுத்த வேண்டும். வீதியோரங்களிலுள்ள பழைய மின் தூண்களை உடைத்து பொது மக்கள் கம்பிகளை அபகரித்து வருவதாகக் கூறப்படுகிறது, இவ்வாறு மின் தூண்கள் வீணடிக்கப்படுவதைத் தடுக்க வேண்டும்.

கொட்டகைகளில் இயங்கி வரும் பாடசாலைகள், சேதமடைந்த ஏழைகளின் குடிசைகள், புனரமைக்க வேண்டிய நிலையிலுள்ள பொது ஸ்தாபனங்கள் போன்றவற்றுக்கு இப் பழைய மின் தூண்களை வழங்க மின்சார சபையினர் முன்வரவேண்டும். அதே வேளை இவற்றை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு நகர்த்துவது கனரக இயந்திரங்கள் மூலம் செய்யப்பட வேண்டியது. அத்தகைய வசதிகள் மின்சார சபையினரிடமே உள்ளன. அவர்கள் பழைய மின் தூண்களை தேவையானோருக்கு நேரடியாகவே ஏற்றிச் சென்று இறக்கி விட்டு அதற்கான செலவை சம்பந்தப்டோரிடம் அறவிடலாம்.

எனவே மக்களுக்கு நன்மைபயக்கும் இச் செயற்பாட்டை நடைமுறைப்படுத்த சம்பந்தப்பட்ட மின்சார சபை அதிகாரிகள் ஆவன செய்யவேண்டும்.

ச. ஆ. கோபாலமூர்த்தி

திருநெல்வேலி.

# பிரிட்டன் - சிலி ராஜீகமுறுகல்

சன்டியாகோ, நவ. 30

**சிலி நாட்டின் முன்னாள் இராணுவத் தலைவர் ஜெனரல் ஒகஸ்ரோ பினோசெற் லண்டனில் தொடர்ந்து தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பதை அடுத்து பிரிட்டனுக்கும் சிலிக்கும் இடையே ராஜீக உறவுகள் பாதிக்கப்பட்டு வருகின்றன.**

இதன் எதிரொலியாக—

சிலியில் தற்போது நடைபெற்றுவரும் கடற்படைக் கண்காட்சி ஒன்றில் இருந்து பிரிட்டனின் றோயல் கடற்படைக் கப்பல் ஒன்று வாபஸ் பெறப்பட்டுள்ளது. அத்துடன் சிலியின் நகரம் ஒன்றில் இருந்த பிரிட்டிஷ் தூதரகமும் மூடப்பட்டுள்ளது.

ஜெனரல் பினோசெற்றை நாடு திரும்ப அனுமதிக்குமாறு பிரிட்டனிடம் கோருவதற்காக சிலியின் வெளிவிவகார அமைச்சர் லண்டன் சென்றுள்ளார்.

முன்னர் சிலிமக்களுக்கு எதிராக ஜெனரல் பினோசெற் மேற்கொண்டதாகக் கூறப்படும் நடவடிக்கைகளுக்காக அவரை விசாரிக்க விரும்புவதாக சிலி கூறி உள்ளது.

இன அழிப்பு, சித்திரவதை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் அவரை விசாரிப்பதற்காகத் தம்மிடம் ஒப்படைக்குமாறு சிலி விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொள்வதா, விடுவதா என்பதைப் பிரிட்டன் இன்னமும் தீர்மானிக்கவில்லை.

ஜெனரல் பினோசெற் கடந்த சில தினங்களுக்கு முன் லண்டனில் கைது செய்யப்பட்டார். (ஐ)

## டில்லியில் அரசியல் ஆலோசனைகள் தீவிரம்

புதுடில்லி, நவ. 30

நான்கு மாநிலங்களில் நடைபெற்ற தேர்தல்களின் முடிவுகள் அறிவிக்கப்பட்டதை அடுத்து அவற்றின் வெற்றி தோல்விகள் தலைநகர்புதுடில்லியில் பல அரசியல் நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளன.

பல அரசியல் கட்சிகள் நேற்று டில்லியில் தனித்தனியே கூடி தேர்தல் முடிவுகளுக்குப் பிந்திய நிலைவரங்களை அலசி ஆராய்வதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தன.

பாரதீய ஜனதாக் கட்சியின் தேசிய செயற்குழு நேற்றுக் காலை கூடியது. தொடர்ந்து கூட்டணிக் கட்சிகளின் கூட்டமும் நடைபெற்றது.

காங்கிரஸ் செயற்குழுவின் கூட்டமும் நேற்று மாலையில் கூட்டப்பட்டது. இடது சாரிக் கட்சிகளும் நேற்றுக் கூடி நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத் தொடரில் கடைப்பிடிக்க வேண்டிய உத்தி பற்றி ஆராய்ந்தன. (ஐ)

## மத்திய பிரதேசத்தில் காங்கிரஸ் பெரு வெற்றி

புதுடில்லி, நவ. 30

மத்திய பிரதேச] மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி பெரு வெற்றியீட்டி உள்ளது.

தேர்தல் நடந்த 320 தொகுதிகளில் நேற்று நண்பகல் 17 இடங்கள் மட்டுமே எஞ்சியிருந்த நிலையில் காங்கிரஸ் கட்சி 158 தொகுதிகளில் வெற்றியீட்டி மேலும் 9 தொகுதிகளில் முன்னணியில் இருந்தது.

பாரதீய ஜனதாக்கட்சி 117 தொகுதிகளில் வென்றது. 4 தொகுதிகளில் முன்னணியில் இருந்தது.

பகுஜன் சமாஜக்கட்சி 9 இடங்களைப் பெற்றது வேறு இரண்டு தொகுதிகளில் முன்னணியில் இருந்தது.

சமதாக் கட்சி 4 தொகுதிகளிலும், ஜனதாக்கட்சி இரு இடங்களிலும் வெற்றியீட்டின.

முதலமைச்சர் திக் விஜய்சிங், துணை முதல்வர் சயாஸ் யாதவ் ஆகிய இருவரும் தாம் போட்டியிட்ட தொகுதிகளில் வென்றனர். (ஐ)

### இன்று கூட்டப்படும்

## நாடாளுமன்ற கூட்டத்தில் அமளி துமளி ஏற்படும்?

புதுடில்லி, நவ. 30

நான்கு மாநிலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சி தோல்வியைச் சந்தித்துள்ள நிலையில் இன்று ஆரம்பமாகும் நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத்தொடரில் அரசு நெருக்கடிகளைச் சந்திக்கும் என அவதானிகள் கருதுகின்றனர்.

இன்று நாடாளுமன்றத்தில் பெரும் அமளி துமளி ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தல் முடிவுகளுக்கு தார்மீகப் பொறுப்பேற்று வாஜ்பாய் அரசு பதவி விலக வேண்டும் என எதிர்க்கட்சிகள் கோரி வருகின்றன. (ஐ)

## கின்னஸ் புத்தகம் மீது ஆதி வாசிகள் சீற்றம்!

சிட்னி, நவ. 30

ஆஸ்திரேலியாவின் ஆதிவாசிகளான 'அபோறிஜின்ஸ்' இனத்தவர்கள் 'கின்னஸ்' உலகசாதனைப் புத்தக வெளியீட்டாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக அச்சுறுத்தியுள்ளனர்.

'சண்டை நடைபெறும் பிரதேசங்கள் தவிர்ந்த உலகின் ஏனைய பகுதிகளில் மிகவும் வன்செயல்கள் மலிந்த இடம்' என்று தமது வாழ்விடத்தை குறிப்பிட்டுள்ளமைக்காகவே அபோறிஜின்ஸ் இனத்தவர்கள் இவ்வாறு அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லான்ட் பகுதியில் உள்ளபாம்தீவு ( Palm Island)என்றஇடமே இந்த ஆதிவாசிகளின் பூர்வீகவசிப்பிடமாகும். இந்தஇடத்தையே உலகில் 'வன்முறைகள்மலிந்தஇடம்' என்றுகின்னஸ்நிறுவனம் அதன் 1999 ஆம் ஆண்டு வெளியீட்டில் குறிப்பிட்டுள்ளது.

இளம் வயதினர் அதிகம் பலியாகும் பிரதேசம் என்றும்—

தற்கொலைகள் மலிந்த பிரதேசம் என்றும்—

இந்த இடத்தை கின்னஸ் புத்தகம் வர்ணித்துள்ளது. (ஐ)

## ஐரோப்பாவில் கடும் குளிர் 100 பேர் பலி!

ஐரோப்பாவில் நீடித்து வரும் கடும் குளிரினால் பலியானவர்களின் எண்ணிக்கை நூறாக அதிகரித்துள்ளது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளே மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நாடுகளில் நவம்பர் மாதத்தில் இதுவரை காணப்படாத அளவுக்கு குளிர் உறை நிலைக்கு வந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ருமேனியாவில் 36 பேரும், போலந்தில் 36 பேரும் இறந்துள்ளனர். (ஐ)

### உலக அரங்கில்

## காங்கிரஸின் 10 ஆண்டு ஆட்சி மிசோரமில் முடிவுக்கு வந்தது

புதுடில்லி, நவ. 30

மிசோரம் மாநிலத்தில் கடந்த 10 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது.

மிசோரம் தேசிய முன்னணி அங்கு நான்கில் மூன்று பெரும்பான்மையுடன் அமோக வெற்றியீட்டியுள்ளது.

தேர்தல் முடிவுகள் வருமாறு:

★ தேர்தல்நடந்ததொகுதிகள்- 40.

★ மிசோரம் தேசிய முன்னணி- 33.

★ காங்கிரஸ்- 6.

★ சுயேச்சை- 01.

மிசோரம் முதலமைச்சர் லஹ்கர் கௌலா தமது சொந்தத் தொகுதியில் தோற்றுப்போனார். (ஐ)

## ராஜஸ்தான் முடிவுகள்

புதுடில்லி, நவ. 30

ராஜஸ்தான் மாநில தேர்தல் முடிவுகள் வருமாறு;-

தேர்தல் நடைபெற்ற மொத்தத்' தொகுதிகள் 197

★ காங்கிரஸ் — 150

★ பாரதீய ஜனதா — 33

பாரதீய ஜனதா அரசின் முதலமைச்சரான பய்ராம் சிங் ஷெகவத் கடும் போட்டிக்கு மத்தியில் தனது தொகுதியில் வென்றார். இதன் மூலம் அவர் தொடர்ந்து 10 ஆவது தடவையாக சட்டப் பேரவைக்குத் தெரிவாகியுள்ளார். ஆனால் அவரது அமைச்சரவையில் இடம்பெற்ற பலர் தாம் போட்டியிட்ட தொகுதிகளில் காங்கிரஸ் வேட்பாளர்களிடம் மண் கவ்வினர். (ஐ)

### கொசோவோவில் உள்ள

## மனிதப் புதை குழியை ஆய்வு செய்ய நிபுணர்

பிறிஸ்டினா, நவ. 30

கொசோவோவில் உள்ள பாரிய மனிதப் புதைகுழிகளை பின்லாந்து சட்ட வைத்திய நிபுணர்கள் பரிசோதனை செய்யவுள்ளனர்.

இதற்கான அனுமதியை யூகோஸ்லாவியா வழங்கி உள்ளது.

ஹெல்சிங்கி பல்கலைக் கழகத்தில் சட்ட வைத்தியத்துறைப் பேராசிரியரான ஹெலனா ரன்டா தலைமையிலான நிபுணர்களின் குழுவுக்கே இந்த அனுமதி கிடைத்துள்ளது. (ஐ)

## மலைகளின் ஆண்டு!

நியூயோர்க், 30

உலகெங்கும் மலைப் பிரதேசங்களில் வாழும் மக்களின் நிலை, மற்றும் அப்பிரதேசங்களின் பாதுகாப்பு போன்றவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் எதிர்வரும் 2 ஆயிரத்து 2ஆம்ஆண்டை 'உலகமலைப் பிரதேசங்களின் ஆண்டு' எனப் பிரகடனம் செய்ய ஐ. நா. பொதுச்சபை தீர்மானித்துள்ளது. (ஐ)

## இஸ்ரேல் யுவதி உலக அழகி

ரெல்அவிவ், நவ. 30

இஸ்ரேலைச் சேர்ந்த அபார்ஜில் ( வயது 19 )என்ற யுவதி உலக அழகியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

இரண்டாம் இடத்தை பிரான்ஸ் அழகி வெரோனிக் தலோக்கும் (வயது 23) மூன்றாம் இடத்தை மலேசிய அழகி பிக் லீம் லீனாவும் (வயது 23) பெற்றனர். (ஐ-10)

### கின்னஸ் சாதனை புரிந்த

## பிரிட்டிஷ் விவசாயி 109ஆவதுவயதில் மரணம்

லண்டன், நவ. 30

இங்கிலாந்தின் வயது முதிர்ந்த விவசாயி எனக் கருதப்பட்ட டேவிட் ஹன்டசன் என்பவர் தமது 109 ஆவது வயதில் காலமானார்.

'மிகவும் வயது முதிர்ந்த பிரித்தானிய தொழிலாளி' என்ற சாதனைக்காக இவரது பெயர் 'கின்னஸ்' புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

இவர் உயிருடன் இருந்த பொழுது அவரது நீண்ட ஆயுளின் ரகசியம் என்ன என்றுவினாவப்பட்டபோது—

அதிக அளவில் உண்ணும் உதிர்ந்த பழங்களும் கூழுமே தனது நீண்ட ஆயுளின் ரகசியம் எனக் கூறியிருந்தார். (ஐ)

## 110 பயணிகள் ரயில் விபத்தில் பலி

சண்டிகர், நவ. 30

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் கடந்த புதன் கிழமை அதிகாலை இடம் பெற்ற ரயில் விபத்தில் 110 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். 250 க்கும் அதிமானோர் காயமடைந்தனர். (ஐ)

## தென்னாசியப் பெண்களை பாதுகாக்க புதிய திட்டம்

புதுடில்லி நவ. 30

தென்னாசியப் பெண்களைப் பாதுகாப்பதற்கான புதிய பிரசாரத் திட்டம் ஒன்று ஐ. நாவின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பால் ரீதியான வன்முறைகளில் இருந்து அவர்களைப் பாதுகாப்பதே இந்தப் புதிய திட்டத்தின் அடிப்படை நோக்கம் ஆகும்.

உலகம் முழுவதும் பெண்களும், சிறுமிகளும் எண்ணற்ற வன்முறைகளுக்கு ஆளாகி உள்ளனர் என்று இந்தப் புதிய பிரசாரத் திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஐ. நா. பெண்கள் அபிவிருத்தி நிதியத்தின் பிராந்திய ஆலோசகர் சாந்தி ஜோஷி தெரிவித்தார்.

தென்னாசியாவிலேயே பெண்கள் பெரும்பாலும் வன்முறைக்கு ஆளாகின்றனர். இறுக்கமான பாரம்பரியங்களும், சமூகக் கட்டமைப்புகளும் பெண்களை பிறந்தது முதல் முழுமையடையும் வரையும் பல்வேறு வன்முறைகளுக்கு முகம் கொடுக்க வைக்கின்றன — என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# ஜேர்மன் பிளாஸ்ரிக் சிகிச்சை நிபுணர்கள் இலங்கை வருகை

கொழும்பு, நவ. 30

இலங்கையில் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை பெறவேண்டிய நிலையிலுள்ள வறிய மக்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக ஜேர்மனியைச் சேர்ந்த சத்திர சிகிச்சை நிபுணர்கள் குழு ஒன்று இலங்கை வந்துள்ளது.

எரிகாயம், உதட்டின் மேற்பரப்பில் வெடிப்பு, தொண்டையில் வெடிப்பு போன்ற காரணங்கள் உட்பட ஏதாவது காரணங்களினால் உடலில் வடுக்களை உடையவர்களுக்கு இவர்கள் சிகிச்சை அளிக்க உள்ளனர்.

இலங்கை ரூபாக்கோ நிறுவனமும் பதுளை றோட்டறிக் கழகமும் ஜேர்மன் உதவி மன்றமும் இணைந்து மேற்படி சத்திர சிகிச்சை நிபுணர்களை இங்கு அழைத்து வந்துள்ளன.

நேற்று முன்தினம் இலங்கை வந்த இவர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருந்து சிகிச்சை அளிக்க உள்ளனர்.

இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில் இவர்கள் பிளாஸ்ரிக் சிகிச்சை பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள வறிய மக்களுக்கு இலவசமாக சிகிச்சை அளிக்க உள்ளனர். (இ-9-ரி)

## சிறுவன் பலி

நெல்லியடி, நவ. 30

உழவு இயந்திரத்திலிருந்து தவறிக் கீழே வீழ்ந்த நான்கு வயதுச் சிறுவன் அதன் சக்கரத்தில் அகப்பட்டு மரணமானான்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7-00 மணியளவில் வரணி கரம்பைக்குறிச்சியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சிவஸ்கந்தராசா பிரதீபன் என்பவரே இறந்தவராவார்.

சடலம் மரண விசாரணைக்காக மந்திகை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டது.

(இ-109)

# அமரர் திருநாவுக்கரசுவின் 65 ஆவது பிறந்த தினத்தையொட்டி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ. 30

வட்டுக்கோட்டை தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் தா. திருநாவுக்கரசுவின் 65 ஆவது பிறந்த தினத்தையொட்டி இன்று பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

வலி. மேற்கு பிரதேச சபை உறுப்பினரும், ரெலோ அமைப்பின் பொதுச்சபை உறுப்பினருமான செ. பத்மநாதன் ரெலோ அமைப்பின் சார்பில் கீரிமலை நகுலேஸ்வராப் பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை கல்வி சார் உபகரணங்களை வழங்குவார். மாணவர்களுக்கு மதிய போசனமும் வழங்கப்படும்.

அமரர் திருநாவுக்கரசுவின் பெயராலும் இதுவரை மரணமடைந்த போராளிகளின் பெயராலும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள 20 குடும்பங்களுக்கு 20 தையல் இயந்திரங்களும், சுயதொழில் ஊக்குவிப்புக்காக 50 குடும்பங்களுக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் செ. பத்மநாதனால் வழங்கப்படும்.

அத்துடன் அவர் பிரதேச சபைமூலம் தமக்குக் கிடைக்கும் சம்பளத்தையும் தான் பணிபுரியும் நிறுவனங்களில் கிடைக்கும் சம்பளத்தில் 25 சத வீதத்தையும் வழங்க இருப்பதாகத் தெரிவித்தார்.

(இ-3)

# காலி அசம்பாவிதம் குறித்து கடற்படைக்குழுவிசாரணை

கொழும்பு, நவ. 30

காலி பூசா பிற்றவல்ல பகுதியில் வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற கடற்படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையிலானமோதலைத் தொடர்ந்து சுமார் 80 வீடுகளுக்குசேதம்விளைவித்த சம்பவம் குறித்து கடற்படை அதிகாரிகளின் விசேட குழு ஒன்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

இந்த விசாரணையில் குற்றவாளிகளாகக் காணப்படும் கடற்படை வீரர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கடற்படை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி சம்பவம் நடைபெறுவதற்கு இரு தினங்களுக்கு முன்னர் காலியில் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டியின் போது சிலகடற்படை வீரர்கள் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு இன்னும் கராப்பிட்டிய ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருவதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

முகாமுக்கு வெளியே விடுதிகளில் தங்கியுள்ள கடற்படை வீரர்களுக்கு கொலைப் பயமுறுத்தல்கள் சிலரால் விடுக்கப்பட்டுள்ளன என்றும் அதை அடுத்து கடற்படை வீரர்கள் தற்போது முகாம்களிலேயே தங்கியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (இ-10)

## கொழும்பில் விபத்து மூவர் பலி!

கொழும்பு, நவ. 30

கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு அருகில் இடம்பெற்ற பஸ்—வான் விபத்தில் இளம் பெண் ஒருவர் உட்பட மூவர் உயிரிழந்தனர். வெளிநாட்டுப் பெண் ஒருவர் உட்பட நால்வர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் இரவு கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு அருகில் — விமானப் பாதுகாப்புப் படையினரின் காவலரணுக்கு அருகில் — இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சுதந்திர வர்த்தக வலயப் பணியாளர்களை ஏற்றிக் கொண்டு கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்றும் கொழும்பிலிருந்து வந்து கொண்டிருந்த வான் ஒன்றுமே விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தில் வான் சாரதி, பஸ் நடத்துநர், பஸ்ஸில் பயணம் செய்த சுதந்திர வர்த்தக வலயப் பணியாளரான இளம் பெண் ஆகியோரே உயிரிழந்தனர்.

(இ-9)

# அரச நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் பிரபாவின் உரை 'குறித்து ஆராயப்படும்

கொழும்பு, நவ. 30

மாவீரர் தினத்தையொட்டி விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே. பிரபாகரன் ஆற்றிய உரை குறித்து இன்று நடைபெறும் அரச நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் ஆராயப்படவிருப்பதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் ஏனைய விடயங்களுடன் இந்த உரைபற்றி ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

அதே நேரம் – ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவும் இன்று கூடவிருக்கின்றது. (இ-3)

# பகிடிவதை காரணமாக மாணவி தற்கொலை!

## கண்டியில் சம்பவம்

கொழும்பு, நவ. 30

பெண்கள் கல்லூரி ஒன்றில் உயர்தர வகுப்பு சிரேஷ்ட மாணவிகள் சிலரின் பகிடிவதை காரணமாக புதிய மாணவி ஒருவர் மனமுடைந்து தற்கொலை செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கண்டியிலுள்ள பிரபல பெண்கள் கல்லூரி ஒன்றிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

பிரியங்கா துஷாரி (வயது 17) என்ற மாணவி உயர்தர வகுப்புக்கு அனுமதி பெற்றுச்சென்ற சமயம் சிரேஷ்ட மாணவிகளினால் பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்டார் எனவும்—

இதனால் மனமுடைந்த மாணவி வீட்டுக்குச் சென்று வீட்டு மலசல கூடத்தின் கூரையில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார் எனவும்— தெரிவிக்கப்படுகின்றது.

(இ-9-10)

# ஈராக்கால் சிறைப்பிடிக்கப்பட்ட 90 இலங்கையர்களுக்கு இழப்பீடு

கொழும்பு, நவ. 30

வளைகுடா யுத்தத்தின் போது ஈராக்கினால் சிறைப்பிடிக்கப்பட்டு பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த 90 இலங்கையர்களுக்கு விரைவில் இழப்பீடு வழங்கப்பட உள்ளது.

சர்வதேச அமைப்புகளின் வற்புறுத்தலினால் விடுவிக்கப்பட்ட இந்த இலங்கையர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் கோரி வந்தது. இதனடிப்படையில் இந்த 90 பேருக்கும் இரண்டு கட்டங்களாக இழப்பீடு வழங்கப்பட உள்ளது.

சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கு அல்லது மீண்டும் வெளிநாடு சென்று தொழில் புரிவதற்கு இவர்களுக்கு உதவி வழங்குவது பற்றியும் ஆராயப்பட்டு வருவதாக வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் தெரிவித்தார். (இ-9)

## செயற்பாட்டு...

(நாலாம் பக்கத் தொடர்)

வீட்டுத்திட்டம் ஆகியவற்றின் நிதி ஒதுக்கீடுகள் பற்றி இறுதி வடிவம் வழங்கப்படவுள்ளதால் பிரதேசத்தில் உள்ள திணைக்களங்கள், பொது நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் க. தர்மராசா அறிவித்துள்ளார்.

(ஐ-117)

## வீதியில் துர்நாற்றம்

வலி வடக்கு, நவ. 30

யாழ். பல்கலைக்கழக ஆனந்தகுமாரசாமி பெண்கள் விடுதியில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் புகையிரத வீதிக்கும், இராமநாதன் வீதிக்கும் இடையில் தேங்குவதனால் துர்நாற்றம் வீசுகின்றது.

இராமநாதன்வீதிவழியாகச் செல்லும் பொதுமக்கள் துர்நாற்றத்தைச் சகித்துக் கொண்டே செல்கின்றனர்.

(ஐ-86)

# தீர்வு யோசனைக்கு ஆதரவாக மக்கள் மத்தியில் பிரசாரம் செய்க

## மல்பெரி குழுவிடம் ஜனாதிபதி கோரிக்கை

கொழும்பு, நவ. 30

வடக்கு — கிழக்கு யுத்தம் விரைவில்முடிவுக்குக்கொண்டு வரப்பட்டு நாட்டில் நிரந்தர அமைதியும், சமாதானமும் ஏற்பட அரசியல் யோசனை எப்படியாவது அமுல் நடத்தப்பட வேண்டும். அதற்கு மக்களின் ஆதரவை பெற அரசியல் யோசனை குறித்து மக்கள் மத்தியில் பிரசாரம் செய்யவேண்டும்.

இவ்வாறு கடந்த வியாழக்கிழமை தம்மைச் சந்தித்த மல்பெரி குழு எம். பிக்களிடம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கேட்டுக்கொண்டார்.

27 எம்பிக்களைக் கொண்ட மல்பெரி குழு ஜனாதிபதியுடன் இரண்டு மணி நேரம் பேச்சு நடத்தியது.

பொதுமக்களின் பிரச்சினைகள் தொடர்பாக நாம் முன்னெடுத்துச் செல்லும் விடயங்களுக்கு சில அரச உயர் அதிகாரிகள் செவி சாய்ப்பதில்லை எமது விடயங்களை கவனத்தில் கொள்வதே இல்லை. சில அரச உயர் அதிகாரிகள் வேண்டுமென்றே பொய்யான தகவல்களை வழங்குகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சி எம். பிக்களுக்கு சில ஆவணங்களையும் தகவல்களையும் வழங்குகின்றனர். ஆனால் அரச எம். பிக்கள் அதே ஆவணத்தைக் கேட்டால் தர மறுக்கின்றனர் என மல்பெரிக் குழு எம். பிக்கள் முறைப்பாடு தெரிவித்தனர்.

நாட்டில் அரிசியின் விலை அதிகரித்துள்ளதால் மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது. ஆகையால் அரிசியை இறக்குமதி செய்ய வேண்டும் என்று மல்பெரிக்குழு எம். பிக்கள் கேட்டுக்கொண்டனர்.

வர்த்தக அமைச்சும் விவசாய அமைச்சும் மேற்கொள்ளும் வெவ்வேறு விதமான நடவடிக்கைகளாலேயே அரிசியின் விலை அதிகரித்தது. ஆகையால் அரசு அரிசியை இறக்குமதிசெய்யத்தீர்மானித்துள்ளது என ஜனாதிபதி பதிலளித்தார்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் எம். பிக்களுக்கு தலா 25 லட்சம் வழங்கப்படுகிறது. அந்தத் தொகையை இரட்டிப்பாக அதிகரிக்க வேண்டும் என மல்பெரிகுழு எம். பிக்கள் கோரிக்கை விடுத்தனர். அது தொடர்பாக பரிசீலிப்பதாக ஜனாதிபதி பதிலளித்தார்.

கடந்தஅரசாங்க காலத்தில் அரசியல் பழிவாங்கலில் பாதிக்கப்பட்ட கல்வி அமைச்சின் கீழ் கடமை புரியும் உத்தியோகத்தர்களுக்கு நட்டஈடும் நிவாரணமும் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அரசியல் பழிவாங்கலில் பாதிக்கப்பட்ட மேலும் பலர் உள்ளனர். அவர்களுக்கும் நிவாரணம் வழங்க அப்பீல் சபை ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார்.

(ஐ-10)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ, 30

வட பகுதியில் கைது செய்யப்பட்டோர் காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கம், அன்னையர் முன்னணி, மனித உரிமைகள் ஒன்றியம் ஆகியவற்றின் நிர்வாகசபை உறுப்பினர்களுக்கிடையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற சந்திப்பின் போது எட்டப்பட்ட முடிவுகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் புதன்கிழமை காலை 10 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெற உள்ளது என்று காணாமற்போனோர் சங்கம் அறிவித்துள்ளது.

அதேநேரம்—சங்கத்தின் உறுப்பினர்களை எதிர்வரும் வியாழக்கிழமை காலை 8-00 மணிக்கு முன்னர் சங்கப்பணிமனைக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-9)


**வைத்தியம்**

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்

வேலணை
வைத்திய கலாநிதி
சி. இராசரத்தினம்,
121,
2 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
T. P. 2459
(60914)



**BARATHY**

சித்தன்கேணி.

பிரத்தியேக வகுப்பு

A/L 2000
இலாப நட்டக் கணக்கு
A/L 99
① கிரயக் கணக்கீடு
② கம்பனி

ஆரம்பம்;
01 - 12 - 98

ஆசிரியர்:
முகுந்தன்
(61001)

# அமைச்சர்கள், எம். பிக்களின் சம்பளம் அதிகரிப்பு இல்லை

## வெளியான செய்திக்கு ஜனாதிபதி மறுப்பு

கொழும்பு, நவ. 30

அமைச்சர்களினதும், நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் சம்பளங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக வெளியான செய்தியில் எந்தவித உண்மையும் இல்லை என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்துள்ளார்.

அமைச்சர்களினதும் நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் சம்பளங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக முன்னர் செய்திகள் வெளியாகி இருந்தன.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்தபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்,

அரச ஊழியர்களது சம்பளம் அதிகரிக்கப்பட்டதனைப் போன்று இவர்களது சம்பளமும் அதிகரிக்கப்பட வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒன்று தான்; ஆனால் நாம் இப்போது பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளோம்.

இந்தச் சந்தர்ப்பத்திலே இவர்களது சம்பள உயர்வு சாத்தியமற்ற ஒன்றாகும்.

மேலும் சம்பள உயர்வு தொடர்பான ஆலோசனை அமச்சரவைக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அது அமைச்சரவையில் நிராகரிக்கப்பட்டுவிட்டது-

இப்படி ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ-9-10)

# 4 இளைஞர்கள் காங்கேசன் தடுப்பு முகாமில்

யாழ்ப்பாணம், நவ. 30

படையினரால் அண்மையில் கைது செய்யப்பட்ட நான்கு இளைஞர்கள் காங்கேசன்துறை பயங்கரவாத தடுப்பு முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என்று மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்குப் படையினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வசந்தராஜா சுதாகரன்— பருத்தித்துறை, எஸ். ரமேஸ்குமார் — நல்லூர், அ. சசிக்குமார் — தாளையடி, அ. தனேஸ்குமார் — தாளையடி ஆகியோரே காங்கேசன் துறைக்கு அனுப்பிவைக்கப்பட்டவர்களாவர்.

இதேவேளை இராசரத்தினம் இராசேஸ்வரன் — புதிய செம்மணி வீதி, நல்லூர் என்பவர் கடந்த 16 ஆம் திகதி முதல் பருத்தித்துறை இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார் என மனித உரிமைகள் ஆணைக் குழு அதிகாரி எஸ். சிறிதரன் தெரிவித்தார். (இ-5)

## இனப் பிரச்சினையை தீர்க்க

# எதிர்க்கட்சியினர் ஒத்துழைக்க வேண்டும்

## மங்கள சமரவீர கோரிக்கை

கொழும்பு, நவ. 30

நாட்டில் நிலவுகின்ற இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசுடன் இணைந்து எதிர்க்கட்சி செயற்படவேண்டும்.

மேற்கண்டவாறு தொடர்பு சாதன அமைச்சர் மங்கள சமரவீர எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைக் கேட்டுள்ளார்.

மாத்தளையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அமைச்சர் இவ்வாறு கேட்டுக்கொண்டார்.

பிரதேச கௌரவத்தைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றது. அந்த முயற்சிகளுக்கு எதிர்க்கட்சியும் பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும்.

நாட்டில் நிலவுகின்ற ஏனைய பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு முன்னர் பயங்கரவாத நடவடிக்கைகள் ஒழிக்கப்பட வேண்டும். தனிபட்ட வேறுபாடுகளைப் பொருட்படுத்தாது பொதுவான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் சகலரும் ஐக்கியத்துடன் செயற்பட வேண்டும்.

சில அரசியல்வாதிகள் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சுதந்திரப் போராட்ட வீரர் என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இப்படி அவர் மேலும் கூறினர். (இ-7)

# சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்

பாதசாரிகள் வீதிகளைக் கடப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் போக்குவரத்து ஒழுங்குகளை கடைப்பிடிக்காத சாரதிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக பொலீஸ் அத்தியட்சகர் அறிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. விபத்துக்களுக்கு சாரதிகளே அதிகளவில் காரணமாக இருக்கின்றனர். எனவே விபத்துக்களைக் குறைப்பதற்கு சாரதிகள் அதிக கவனம் எடுக்கவேண்டும். அதுமட்டுமன்றி பாதசாரிகள் வீதிகளைக் கடப்பதற்கு வசதியாக விசேட அடையாளங்கள் வீதிகளில் பொறிக்கப்பட்டுள்ளன. இந்த இடங்களை பாதசாரிகள் பயன்படுத்துவதன் மூலமும் விபத்துக்கள் ஏற்படுவதனைக் குறைத்துக் கொள்ளலாம்.

அதேவேளை சாரதிகளில் பலர் இவ்வாறு அடையாளம் இடப்பட்ட பகுதிகளில் கூட கட்டுப்பாடுகளின்றி வாகனங்களைச் செலுத்துவதாக முறைப்பாடுகள் செய்யப்படுகின்றன. எனவே அவ்வாறு கட்டுப்பாடுகளின்றி செயற்படும் சாரதிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் —

என்றும் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ஐ. கே. விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

# காணாமற்போனோர் தொடர்பாக கொழும்பில் வழக்கு தாக்கல் ஆகும்

கொழும்பு நவ. 30

குடாநாட்டில் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர்சார்பில் கொழும்பு நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த மனுக்களைத் தாக்கல் செய்வது தொடர்பான சட்ட ஆலோசனைகளை யாழ். மாவட்ட அரச சார்பற்ற அமைப்புக்களின் இணையப்பிரதிநிதி ஒருவர்கொழும்பில் பெற்று வருவதாகத். தெரிவிக்கப்பட்டது.

கைதடிப் பகுதியில் கைது செய்யப்பட்டு காணாமல் போன 24 பேர் உட்பட நூறு பேர் தொடர்பாக மனுக்கள் தாக்கல் செய்யப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-10)

# அமைச்சரின் வவுனியா விஜயம் இறுதி நேரத்தில் ரத்தானது

வவுனியா, நவ. 30

வவுனியா மடுகந்தைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கலாசார மண்டபத்தைத் திறந்துவைக்க நேற்று வருகைதரவிருந்த பௌத்த சாசன கலாசார அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடியின் விஜயம் இறுதி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டது.

அமைச்சரின் விஜயத்துக்காக வவுனியா நகரில் நேற்றுக் காலை முதல் பாதுகாப்பு முன்னேற்பாட்டு நடவடிக்கையாகத் தேடுதல்கள், சோதனைகள் தீவிரமாக்கப்பட்டிருந்தன.

அமைச்சரின் விஜயம் ரத்துச் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டதையடுத்து நகர் வழமை நிலைக்குத் திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-164)

# விஞ்ஞான பட்டதாரி கற்கை நெறிக்கு அடுத்த ஆண்டு முதல் அனுமதி இல்லை

கொழும்பு, நவ. 30

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் வெளிவாரி விஞ்ஞான பட்டதாரி கற்கை நெறிக்கு அடுத்த ஆண்டு முதல் மாணவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானப் பட்டப்படிப்பினை வெளிவாரியாகக் கற்பதற்கு இதுவரையில் அனுமதி வழங்கப்பட்டு வந்தது.

ஆனால் அடுத்த ஆண்டு முதல் இந்த கற்கை நெறிக்கு மாணவர்களை அனுமதிப்பதில்லை என்று பல்கலைக் கழகம் அறிவித்துள்ளது.

எனினும் இதுவரை அனுமதி பெற்றுள்ள மாணவர்களின் நலன் கருதி 2004 ஆம் ஆண்டுவரை விஞ்ஞான பட்டதாரி வெளிவாரிப் பரீட்சைகள் நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

(ஐ-9-10)

### படகு மூலம்...

(முதலாம் பக்கத் தொடர்)

இவர்கள் 16 பேரும் மண்டபம் அகதி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(இ-9)

### வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

பெற்றுக் கொண்ட அவர் ஜனாதிபதியுடன் பேச்சுக்கள் நடத்திய பின்னர் மாகாண சபை நிர்வாகத்தில் மாற்றங்கள் வரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இறுதியாக கல்வி அமைச்சுச் செயலாளருடன் பேச்சு நடத்திய பின்பே ஆளுநர் கொழும்பு சென்றார் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆளுநர் விரைவில் வடக்கு—கிழக்கில் உள்ள சகல மாவட்டங்களுக்கும் விஜயம் மேற்கொள்ளவிருக்கிறார்.

(இ-3-10)

### நிபந்தனை...

(முதலாம் பக்கத் தொடர்)

★ வழங்கப்பட்ட இலக்கங்களின் படி குருநகர் கரையில் மீன்பிடிக் கலங்கள் வரிசைப்படுத்தி நிறுத்தப்பட வேண்டும்.

★ காலை 5-00 மணி தொடக்கம் மாலை 5 – 00 மணிவரை மீனவர்கள் குடாக் கடலில்மீன்பிடிக்க அனுமதிக்கப்படுவர்.

மேற்கூறப்பட்ட விதிகளை மீனவர் சங்கப் பிரதிநிதிகள் ஏற்றுக் கொண்ட பின்னர் தம்மிடம் தெரியப்படுத்தினால் தங்களால் போடப்படும் கடல் எல்லையில் குடாக் கடலில் மீன்பிடிக்க மீனவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என படைத்தளபதிகள்தெரிவித்ததாக குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் நேற்றுத் தெரிவித்தனர்.

இதேசமயம் கடந்த 5 ஆம் திகதி தொடக்கம் குடாக் கடலில் மீன்பிடிக்கக் கூடாதென அரசு விதித்த தடையைத் தொடர்ந்து பாஷையூர் கடலில் இருந்து தரைக்கு ஏற்றப்பட்ட பாஷையூர் மீனவர்களின் மீன்பிடி வள்ளங்கள் யாவும் பாஷையூர் இராணுவ முகாம் பொறுப்பாளரின் பணிப்பைத் தொடர்ந்து நேற்று முன்தினம் மீண்டும் பாஷையூர் கடலில் மீனவர்களால் இறக்கப்பட்டுள்ளன.

(இ-17-51)

## பெண் காயம்

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ். நகரில் ஆஸ்பத்திரி வீதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற சைக்கிள் விபத்தில் ஒரு பெண் காயமடைந்தார்.

பண்டத்தரிப்பு பிரான்பற்றைச் சேர்ந்த பாதசாரியான சுப்பிரமணியம் அன்னபாக்கியம் (வயது 38) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார், (இ-15)

### வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

கும் போது விடுதலைப் புலிகள் ஊடுருவியிருப்பதற்கு வாய்ப்புஉள்ளது என்பதையே காட்டுவதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-3-164)


## இடம் மாற்றம்

## லைடன் புடைவை நிலையம்

தற்போது கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் இன்று 30-11-98 திங்கட்கிழமை 12.14 முதல் 1.44 வரை வரும் சுப வேளையில்,

இல. 410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

என்ற முகவரியில் ஆரம்பித்துவைக்க உள்ளோம் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம். அன்று சகல வாடிக்கையாளர்களும் சமுகம் தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

லைடன் புடைவை மாளிகை
இல, 410, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ் நிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம்.

(சி-5642)

## கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனம்

(வ. ப)

எம்மிடம் பதிவு செய்து கொண்ட முகவர்களும், ப. நோ. கூ. சங்கங்களும் வியாபாரிகளும், தங்களுக்குத் தேவையான பொருள்களை பதிவு செய்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். உடனடியாக இவற்றைப் பெற்றுக்கொள்வதாயின் துறைமுகத்திலிருந்து நேரடியாக விநியோகிப்பதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்து தரப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

விலை விவரங்கள்

| | மொத்தவிலை | மொத்த விலை | சில்லறை விலை |
|---|---|---|---|
| 1) சிமெந்து யப்பானிலிருந்து தருவிக்கப்பட்டது. | 490. 00 (500 க்கு மேல்) | 510. 00 (200 க்கு மேல்) | 520. 00 |

2) அஸ்பெஸ்டஸ் கூரைத் தகடும், தட்டைத்தகடும் மொத்தவிலையில் பெற்றுக் கொள்ளலாம்.

பிராந்திய முகாமையாளர்
கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனம்,
யாழ்ப்பாணம்.

(60976)


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில்30-11-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.